செந்தமிழ்

தொகுதி 54 பகுதி 10, 11

ஜனவரி - பெப்ரவரி 1959.

JL
031.0211, N02
NS 8.54.10,11
208261

4

504
1.59

650
644

OFFICE OF THE REGISTRAR OF ...
FEB 1959
MADRAS

செந்தமிழ்

விளம்பி
தை
1959
JANUARY

குதி-டுச் } மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு { Vol. 54
ி - ௰ } { Nos. 10

உ

உள்ளுறை

1. தை பிறந்தால்—அ. மு. பரமசிவானந்தம் M. A., M. Litt. 291
2. மலேயாளமொழி தமிழின் கிளைமொழியே — அ. கி. பரந்தாமனர் 297
3. நற்றிணை அரசப்புலவர்கள்—இராமையாபிள்ளை 301
4. இலக்கியத்திறனாய்வு—நா. பாலுசாமி M. A., 307
5. உலகச்சமயங்கள் — (கி. பழனியப்பன், மதுரை) 317
6. சங்கச் செய்திகள் 322

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A. (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T. Ph. D. தமிழ்த்துறைத் தலைவர் தியாகராசர் கல்லூரி, மதுரை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து, M. A., B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர். மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர். மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்–மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருச Vol. 54	விளம்பி—தை 1959—January	பகுதி ௰ No. 10.

தை பிறந்தால்

அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர்கல்லூரி, மதுரை.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது சாதாரண மக்கள் வழங்கும் தமிழ்நாட்டுப் பழமொழி. தை மாதம் பிறந்தால் அப்படி என்ன வழி பிறக்கப் போகிறது? அந்தத் தை அவ்வளவு சிறந்த மாதமா? இல்லாததை என்ன சாதிக்கப்போகிறது அந்தத் தை? இதுபோன்ற கேள்விகள் உள்ளத்து எழுதல் இயல்புதான். எனினும் அந்தப் பழமொழி நாட்டில் நெடுங்காலமாக வழக்கில் இருந்து வருவதைப் பார்த்தால் நிச்சயம் இத்தைமாதம் மக்கள் வாழ்க்கைக்கே வழிகாட்டும் மாதமாக இருந்திருக்கக்கூடும் என்பது மெய்யாகும்.

மக்கள், மனமகிழ்ச்சியோடு வாழ்வதே வாழ்க்கை, அந்த இன்ப உணர்ச்சியை 'மனம் குளிர்ந்தது' என்று சொல்லுவார்கள். உள்ளம் குளிர்ந்து, உணர்ச்சி சிறந்து வாழ்வதே நல்வாழ்வு. அந்த வாழ்வைத் தைத்திங்கள் வழங்குகின்றதுபோலும். சங்ககாலந் தொடங்கி இன்றுவரை இத் தைத்திங்களைப் பற்றித் தமிழ்நாட்டு இலக்கியங்கள் பாடுகின்றன. குளிர்ந்த தண்மைக்கு உவமையாகத் தைத் தண்மையைக் குறிக்கின்றார்கள் புலவர்கள். அனைவரும் வேறுபாடற்று, கலந்து, மூழ்கி, நலம் காணும் குளிர்ந்த நல்ல பொய்கையைத் 'தைத்திங்கள் தண்கயம்' என்

2083461

கின்றார்கள். தைப் பூசவிழா தேவாரத்தில் சிறப்பித்துப் பேசப்படுகின்றது. தையின் முதல்நாளாகிய பொங்கல் நாள் தமிழர்களுக்குத் தலை சிறந்த நாளாகப் போற்றப்படுகின்றது. ஆடியில் உழுது விதைத்து அடுத்துவரும் மாரிக்காலத்தில் போற்றி வளர்க்கப்பெற்ற பயிர்களெல்லாம் 'கல்விசேர் மாந்தரின்' தலைவணங்கிக் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராகும் காலம் இத்தை மாதமே யன்றோ? தமிழ் நாட்டில் பெரும்பாலராக உள்ள உழவர் அப்பயன் கொண்டு தாமும் அருந்தி, சுற்றத்தாரையும் அருந்தச்செய்து மகிழ்ந்துகொண்டாடும் நாளன்றோ தைத் திங்கள். ஆம்! அந்த மாதத்தில் புற உலகம் குளிர்ந்துள்ளது போன்றே மக்களது அகமும் வயிறும் நிறைந்து குளிர்ந்திருக்கும் என்பது உறுதி.

மேலும் மண வாழ்வு தொடங்குவதற்கும் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். மணமாகாத இளைஞர்களை நோக்கி மற்றவர் 'உங்களுக்குத் தை பிறந்தாலன்றோ வழிபிறக்கும்' என்று வேடிக்கையாகப் பேசுவதைக் காண்கின்றோம். தை பிறந்ததும் மணப் பேச்சைத் தொடங்கிய பெற்றோர், காமத்தேவன் பங்குனிப் பருவம் செய்யும் இளவேனிற் காலத்து அவர்களுக்கு மண முடித்து, அவ்வேனிற்காலத்தை அவர்களது 'தேன் பிறை' நாட்களாகச் சிறக்கச் செய்வது நாம் காண்பதன்றோ! ஆகவே மண வாழ்வுக்கும் தை பிறக்க வேண்டுவது இன்றியமையாதது!

தையைக் காணுமுன் அதற்கு முன் வந்து செல்லும் மார்கழியையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இம்மார்கழியைச்சாதாரணமாகப் 'பீடை' மாதம் என்பார்கள். ஆனால் அம்மாத நிகழ்ச்சிகளைக் காணின் அது 'பீடை போக்கும் மாதம்' என்றுஅழைக்கத் தகுதி வாய்ந்த தென்பது தெற்றெனத் தெளிவுறும். மார்கழி மாதத் தொடக்கமே இனிய திருப்பாவை, திருவெம்பாவைகளுடன் தொடங்குகின்றது. சைவ வைணவப் பெரியார்கள் பாடி வைத்த இந்த இரண்டு பாசுரங்கள் மக்கள் உள்ளங்களைக் குளிர் விக்கின்றன. விடியற்காலையில் எழுந்து தூய குளிர்ந்த நீரில்

துளைந்தாடி இப்பாவைப் பாடல்களை ஓதி, மக்களை உணர்வு பெற்றவராகச் செய்வது இன்னும் நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சி தானே. அப்பாவை நூல்கள் என்னபகர்கின்றன? நாட்டில் நல்ல மழை பெய்து, பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்ற பாடல்கள் அவை. மணமாகாத கன்னிப் பெண்கள் கருத்துக்கேற்ற மணாளரை வேண்டி மேற்கொள்ளும் பாவை நோன்புப் பாட்டுக்கள் அவை. அந்த நல் வாழ்வுக்கு நாடெங்கும் வாழ வேண்டுமென்ற நல்ல உணர்வு தேவை. அந்த உணர்வு நல் மழை பெய்தாலன்றோ நிறைவேறும். அதையே ஆண்டாளும், மாணிக்க வாசகரும் அழகாகக் காட்டுகின்றனர்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல்—பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்"

என ஆண்டாள் பாடுகிறார். மாணிக்கவாசகரும்,

"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து அம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோரெம்பாவாய்"

என்று மழையை வருமாறு வேண்டுகின்றார். மழையின்றி மாநிலத்தார்க்கில்லையாதலின் அவர்கள் மழை வேண்டி, அம்மழை மூலம் மாநிலமும் மக்கள் உள்ளமும் ஒரு சேரக் குளிர்ந்து நிறைந்து சிறக்க விரும்புகின்றனர், ஆகவே மார்கழி மாதம் இவ்வாறு மக்கள் மாசு நீங்கிச் சிறக்க வழி கோலுகிறது. இறுதிநாளாகப் 'போகி' நாளில் மாசெல்லாம் 'போகி'ப் போகி

என்று ஒழிந்தனவற்றையும் கழிந்தனவற்றையும் நெருப்பிலிட்டு அத்துடன் நம் உள்ள மாசுகளையும் 'தீயினில் தூசாகு' மாறு செய்து தைத்திங்களை நல்ல தூய-மாசற்ற-உள்ளத்தோடு வரவேற்கிறோம். அந்த நாளே முதல்நாளாகிய பொங்கலாகச் சிறக்கிறது. அந்த நாள் பிறந்தால் அனைவருக்கும் வழி பிறக்கும் என்ற பழமொழி நாட்டில் எழுந்தது.

தாம் கருத்தில் கொண்ட தலைவனைப் பெற மகளிர் தைத் திங்களின் தண்கயம்படியும் சிறப்பினை நற்றிணைப் பாடல் ஒன்று நன்கு விளக்குகிறது. தலைவன் தலைவியைக் களவு மணத்தில் கூடி இன்புறுகின்றான். பின் தோழி அவனை அங்கு வாரற்க என்று சேட்படுத்துகின்றாள். ஆனால் அவன் தலைவியின் உள்ளத்தை அறிவான். தன்னை வேண்டித் 'தைத்திங்கள் தண்கயம் படியும்' தலைவி என்னை வெறுப்பாளல்லள்; 'ஆகவே நீ சேட்படுத்தாதே' என்று தோழியிடம் கூறுகிறான். அவ்வடிகள் படித்து மகிழத்தக்கன.

பெரும் புலர் விடியலின் விரும்பிப் போதந்து
  தழையும் தாரும் தந்தனன் இவன் என
இழை அணி ஆயமோடு தகுநாண் கடைசித்
  தைத் திங்கள் தண் கயம் படியும்
பொருந்தோள் குறுமகள் அல்லது
  மருந்து பிறிதில்லை யான் உற்ற நோய்க்கே

என்பது (நற்றிணை 80) பூதன் தேவனார்பாட்டு. இக்கருத்தையே கலித்தொகை 59-ஆம் பாட்டும் "தையில் நீராடிய தவம் தலைப் பாடுவாயோ" என்று வற்புறுத்துகின்றது.

இனிப் பல்வேறு பணிபொருட்டுப் பிரிந்து சென்ற தலைவன் இத் தைத் திங்களில் தலைவியிடம் திரும்பி வருவான் என்பதை அகநானூறு (269) நமக்கு விளக்குகின்றது. தலைவன் திரும்பவில்லையே என்று வருந்துகிறாள் தலைவி. அருகிலிருந்த தோழி 'அஞ்சற்க; தை நின்ற தண் பெயல் கடைநாள்' வருகுவன் என்று வலியுறுத்தி அத்தலைவியின் வாட்டம் நீக்கி மகிழ்விக்கிறாள். அப்படி விளக்கும்போது மகளிர் அத் தைத் திங்களில் நீராடி மேற்

கொள்ளும் பாவை நோன்பையும் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். அத்துடன் தையில் வயல் விளைந்து வளம் கொழிந்துள்ளதையும் காட்டத் தவறவில்லை அவர்.

மேலும் ஆலூர் மூலங்கிழார் என்ற மற்றொரு புலவர் அத் தைத் திங்களில் தனிமையில் வாடிய தலைவியின் தன்மையைக் கூறவந்தவராகி, அத் தைத் திங்களில் மழை நின்று நன்மலர்கள் பூத்துப் பனியும் வாடையும் நம் நாட்டை விட்டே தெற்கு நோக்கிச் செல்லும் தன்மையையும், பிற-இயற்கை வளங்களையும் அழகுபடக் காட்டுகிறார். இதோ அவர் வாக்கு.

"தளை பிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலரும்
தை நின்ற தண்பெயல் கடைநாள்
வயங்கு கதிர் காந்த வாடை வைகறை
விசும்பு உரிவதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குலும்" (அகம்-24)

இவையே அன்றிச் சங்க இலக்கியங்களாகிய புறநானூற்றிலும் ஐங்குறு நூற்றிலும் குறுந்தொகையிலும் இத் தைத் திங்களைப் பற்றியும் அதன் தண்ணிய புனல் நிறைந்த குளங்கள் பற்றியும் அதில் படிந்தாடுவோரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. பிற்கால இலக்கியங்கள் பலவும் தை மாதத்திய நிறைமதி விழாவையும் தன்மையையும் குறிக்கின்றன. இவற்றின் அடிப்படை எல்லாம் ஒன்றாகவே நின்று முடியும். அதுதான் மன அமைதி பெற்று மற்றவரையும் வாழவிட்டுத் தாமும் வாழ்தல்.

தை முதல் நாளில் நடைபெறும் பொங்கல் விழா இச் சிறப்பைக் குறிப்பதேயாகும். வயலில் விளைந்த வளத்தைக் கொண்டு தத்தம் தோட்டங்களில் கிடைக்கும் பச்சை மரக்கறிகளையே பயன்படுத்தி, பால்விட்டுப் பொங்கலிட்டு மழைக்குமுதற்காரணமாகிய ஞாயிற்றுக்கு படைப்பதன்றோ பொங்கல். ஊரில்வாழும் மக்கள் உள்ளங்களிலெல்லாம் மகிழ்ச்சி பொங்க, உலகில் இறைவன் அருள்பொங்க, அனைவரும் பொங்கலோ பொங்கல் என்று

ஆரவாரஞ் செய்து, அனைவருக்கும் உணவளித்துத்தாமும் உண்டு மகிழும் பொங்கல் விழா தமிழர் வாழ்நாளில் தலை சிறந்த விழாவாகும். உழவனுக்கு உறுதுணையான மாடுகளுக்குச் சிறப்புச் செய்வதே மாட்டுப் பொங்கல். பின் மூன்றும் நாள் அனைவரையும் கண்டு தான் பெறும் இன்பம் வையகம் பெறுக என்று வாழ்த்தி வாழ்வளிப்பதே காணும் பொங்கல். இவ்வாறு நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை என்ற நல்ல உள்ளத்தோடு பிறப்பது தைத்திங்கள், அத் தைத் திங்கள் இதோ இந்த ஆண்டு இன்று பிறக்கிறது. இந்தப் பொன்னாள் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாக! எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலையில் இன்று பிறக்கும் தைத் திங்கள் வழிகோலுமாக! தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஆவலோடு எதிர்நோக்கியிருக்கும் உலக மக்களுக்கு அவர்கள் வாழ்வின் தேவைகளை அளித்து, உள்ளங்களைத் தூய்மையாக்கி எல்லோரும் இன்புறும் நிலையை நல்குவதாக! ஆம்! தை பிறந்து விட்டது! இனி மக்கள் உள்ளங்கள் திறந்து மாசு நீங்கி நல்வழி பிறக்க வேண்டும். நாடு செழிக்கவேண்டும். நலம் பொங்க வேண்டும்!

மலையாளமொழி தமிழின் கிளைமொழியே

[அ. கி. பரந்தாமனார், M. A.]
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

280-ஆம் பக்கத் தொடர்ச்சி

பேரறிஞர் M. சீனிவாச அய்யங்கார் அவர்கள், மலையாள நாட்டிலுள்ள இடப்பெயர்களோடு ஊர், காடு, கோடு, நாடு, தோட்டம், கரை முதலிய தமிழ்ப் பெயர்கள் சேர்ந்திருக்கின்றன என்றும், தம்புரான் தம்புராட்டி என்னும் மலையாளச் சொற்கள் முறையே தம்பிரான், தம்பிராட்டி என்னும் தமிழ்ச் சொற்களின் சிதைவுகளே என்றும், தமிழ் எழுத்துக்களான ழ, ற ஆகிய இரண்டு எழுத்துக்களும் மலையாள மொழியில் இருக்கின்றன என்றும், மலையாளத்தில் இலக்கணம் கி. பி. 1860-ல்தான் தோன்றியது என்றும், மலையாளமொழி கி. பி. 10-ஆம் நூற்றாண்டிலேதான் உருவெடுத்தது என்றும், கொடுந்தமிழே மலையாளம் என்றும் தமது நீண்ட ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் வாதில் (வாயில்), படிஞ்ஞாறு (படுஞாயிறு), ஒள்ள (உள்ள), ஒண்டாயில் (உண்டாயில்) இருந்நருள (இருந்தருள), எழுந்நள்ளி (எழுந்தருளி) என்னும் மலையாளச் சொற்களெல்லாம் தமிழ்ச் சொற்களின் திரிபுகளே என்றும் எடுத்துக் காட்டி யிருக்கிறார்.

கணேசபணிக்கர் என்பவர் கி. பி. 1350ல் இராமாயணத்தை முதல் முதல் மலையாளத்தில் இயற்றியவர். இவர் மலையாளத்தின் முதலாசிரியர். அவர் இயற்றிய இராமாயணத்தில் வருவது இது:

"கொண்டலின் நேரிருண்டு சுருண்டு நீண்டொளி வார்ந்துதிங்ஙவும்,
குந்தள பாரமொடு முகில் குலத்திட மின்நல்போலே,
புண்டரீ கேக்ஷணந்நரிகெப்பொலிந்தவள் ஸீதசொந்நாள்"

இதில் குந்தளபாரம் என்னும் சொல்லும், புண்டரீகேக்ஷணன் என்னும் சொல்லும் ஆகிய இரண்டும் வடசொற்கள்; மற்றவை தமிழ்ச் சொற்களின் திரிபுகளே. வார்ந்து—வார்ந்து; இட—இடை;

போலே-போல; அரிகே-அருகே. இதில் வரும் வாக்கிய அமைப்பும் தமிழிலக்கண முறைப்படி வந்துள்ளதேயாகும்.

நம்பூரி என்பவர் கி. பி 1550-ல் இயற்றிய கிருஷ்ணகதையில் உள்ளவை கீழ்வருபவை:

"அம்மதா நந்நேரம் தந்மகந் தந்நேயும்
செம்மெ யெடுத்துக்கொண் டங்குபோவான்"

கீழ்வருபவை கி. பி. 1750 ல் இயற்றிய நளசரித்திரத்திலுள்ளவை:

"பூத்தும் தளிர்த்துமல்லாதே பூருஹங்களில்
பேர்த்துமொந் நில்லி விடேகாண்மான்"

இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது மலையாளமொழி தமிழாகவே இருப்பதை உணராமல் இருக்க முடியுமா?

ஆராய்ச்சிப் பேராசிரியர் S. வையாபுரிப்பிள்ளையவர்கள் முன்னிருவரைவிட மலையாள மொழியையும் தமிழ் மொழியையும் அறிவியல் முறையில் (Scientific Method) நன்கு ஆராய்ந்து மலையாள மொழி தமிழ் மொழியின் கிளைமொழியே என்று தமிழும் மலையாளமும் என்னும் கட்டுரையில் நிறுவியுள்ளார். அவர் சொற்கள், சொல்வடிவம், ஒலிமாற்றம்; சொற்களின் அமைப்பு, சொற்பொருள், மொழியின்நடை, செய்யுள் அமைதி, சாசன இலக்கியம், இலக்கணமுறை, மரபுத் தொடர்கள், வரலாற்றுநெறி ஆகிய இவற்றைக் கொண்டு ஆராய்ந்திருப்பது இங்குக் குறிப்பிடுதற்குரியது. மலையாளத்தில் வழங்கும் பிரான், சிரி, தங்கம் ஆகிய இவைஇடைக்காலத்திலும் பிற்காலத்திலும் தோன்றிய தமிழ்ச்சொற்கள் என்றும் மலையாளத்திலுள்ள உடலம், இல்லம்போன்ற சொல்வடிவங்கள் இடைக்காலத்தவை என்றும், ஞான், ஒற்று என்பவை இடைக்காலத் தமிழில் தோன்றிய நான், ஒன்று என்பவற்றின் ஒலி மாற்றங்கள் என்றும், கின்று என்னும் இடைநிலை நன்னூல் காலத்தில் ஏற்பட்டது என்றும், அதுவே மலையாளத்தில் அறியிக்கிந்நேன் (அறிவிக்கின்றேன்) என்று சிதைந்து புகுந்தது என்றும், மலையாளப்பாட்டு நடை தமிழ் நடையை ஒத்திருக்கின்றது என்றும், மலையாளத்தில் வழங்கும் திருவுள்ளம், திருமேனி திருவடி இவை தமிழில் இடைக்காலத்தில் தோன்றிய மரபுத் தொடர்கள் என்றும், தமிழ் எழுத்துக்குரிய வட்டெழுத்துக்களே மலையாளநாட்டில் கையாளப்பட்டு வந்தன என்றும், பழைய மலையாளக் கவிஞர்கள் மலையாளத்தைத் தமிழ் என்ற பெயராலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றும், இராமபணிக்கர் தமது பிரமாண்ட புராண மொழி பெயர்ப்பில், 'இது ஞான் தமிழாய்க் கொண்டறியிந்நேன்' என்று குறிப்பிட்டிருப்பதே இதற்குச் சான்றாகும் என்றும், மலையாளம் தமிழின் கிளையாகப் பிரிந்தகாலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு என்றும் பிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள்.

மலையாளமொழி கிளைமொழியாகப் பிரிவதற்குக் காரணங்கள் யாவை? மலையாள நாடு மலைத்தொடரால் பிரிக்கப்பட்டிருந்ததால் தமிழ் நாட்டிற்கும் மலையாள நாட்டிற்கும் அக்காலத்தில் போக்குவரத்துக் கடினமாயிருந்தது. அங்கிருந்த தமிழ்மொழி செம்மையடையாமல் கொடுந் தமிழாகவே வழங்கி வந்தது. அங்குப் பிற்காலத்தில் தமிழைச் செம்மை செய்ய இலக்கணப் புலவர்கள் இல்லாமலிருந்தார்கள். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சேர நாட்டில் ஐயனாரிதனார் இலக்கணப் புலவராக இருந்தார். அவர் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றினார். அவருக்குப்பின் அங்கு ஒருவரும் தோன்றவில்லை. தமிழ்க் கல்வி அங்கு நல்லமுறையில் அளிக்கப்படவில்லை. கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் மலையாள நாட்டை ஆட்சிபுரிந்த தமிழரசர்கள் அங்குத் தமிழ்மொழியை வளர்க்கத் தவறிவிட்டார்கள். பிற்காலத்தில் வடமொழிச் செல்வாக்கு அங்கு மிகுதியாகிவிட்டது. மலையாள நாட்டின் குளிர் வெப்பநிலை மூக்கொலியால் பேசும் தன்மையை உண்டாக்கிவிட்டது. இக்காரணங்களால் மலையாள மொழி வேறொரு மொழிபோல் தோன்றும்படியாய் விட்டது.

மலையாளம் என்னும் சொல்லே தமிழ்ச்சொல். மலை + ஆளம் = மலையாளம். மலையை ஆளும் இடம் என்பது பொருள். மல என்னும் சொல்லோடு நாடு எனும் பொருளுள்ள பார் என்

னும் பாரசீகச் சொல் சேர்ந்து மலபார் எனும் பெயர் பிற்காலத்தில் வழங்கியது. ஐரோப்பியர்கள் தமிழையே மலபார் என்று குறிப்பிட்டார்கள்.

உண்மையில் மலையாளம் கொடுந் தமிழும் வடசொற்களும் கலந்த இனியமொழி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மலையாளம், மூலத் திராவிடத்திலிருந்து தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளைப்போல் பிரிந்ததாகச் சொல்லப்படுவதை மொழி நூலறிஞர்கள் ஒப்புக்கொள்வதில்லை. எந்த நெறியைக்கொண்டு நோக்கினாலும் அந்த மலையாளமொழி இந்தத் தமிழிலிருந்து கிளைத்த மொழியாகும் என்பது மறுக்கமுடியாத மறைக்க முடியாத உண்மையாகும்.

மலையாள மொழியாராய்ச்சியில் தலைசிறந்து விளங்கிய பேராசிரியர் A. R. ராஜராஜவங்மா அவர்கள்,

(1) 'மலநாடாய மலையாளத்திலே ஆதிவாசிகள் தமிழரும் அவருட பாஷ தமிழுமாயிருந்தது'' என்றும்,

(2) "மலயாளம் தமிழின்றே ஒரு உபபாஷா" என்றும் நடுநிலையிலிருந்து கூறியி நப்பது ஒன்றே உண்மையை நிலைநாட்டப் போதுமானது. இதைப் பேராசிரியர் பிள்ளையவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

சென்னையிலுள்ள மலையாள அறிஞர்கள் 1953-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6ஆம் நாள் திங்கட்கிழமையன்று சென்னை வேப்பேரியிலிருக்கும் கேரள சமாஜத்தின் ஆதரவில். "மலையாள மொழியின் தோற்றம்" என்னும் பொருள் குறித்து வாதம் நடத்தினர்கள். டாக்டர் S. K. நாயர், பேராசிரியர் K. V. நம்பூதிரிபட், M. P. நாராயணமேனன், M. P. சங்குண்ணிநாயர் இவர்கள் அனைவரும் இடைக்காலத் தமிழிலிருந்து தோன்றியதே மலையாளமொழி என்று சான்றுகள் காட்டி முடிவுகட்டினர்கள். இச்செய்தி 8—12—1953 மெயில் நாளிதழில் வெளிவந்தது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் கூறியதும் இதுவே.

நற்றிணை அரசப் புலவர்கள்

(வித்துவான் நா. இராமய்யா பிள்ளை, B. O. L. மதுரை)

சங்க இலக்கியம் பத்துப்பாட்டு எட்டுத்தொகை எனப்படும். எட்டுத் தொகையுள் நற்றிணை என்பது முதலில் வைத்து எண்ணப்படும். "நற்றிணை நல்ல குறுந்தொகை" என ஒரு வெண்பா உண்டு. குறுந்தொகை முதலாய நூல்களுக்கு அடை உண்டு என்றும் நற்றிணைக்கு அடை இல்லை என்றும் கூறுவர்: ஒரு சாரார் 'நல்' என்பதே அடை எனக்கூறுவர். மற்றொரு சாரார் இதற்கு அடை கொடாததே சிறப்பாய் அமைந்தது, மற்றவற்றினின்றும் பிரித்துக்காட்டலின் என்பர். எவர் கூற்று யாதாயினும் நற்றிணை ஒரு நல்ல நூல். அந்நூலுள் நுழைவதே நம்கருத்தாகும்.

நற்றிணையிலுள்ள 400 பாடல்களில் அரசர்கள் பாடல்களைப் பொறுக்கி அவற்றின் கருத்துக்களையும் சொல்நயங்களையும் ஆழமுடைமையையும் காணுதலே நாம் இங்கு எடுத்துக்கொண்ட காரியமாம். நாட்டைச் செங்கோல் செலுத்தி ஆண்டு, புலமை நிரம்பியவர்களைப் பொருள் கொடுத்து ஆதரித்துத் தமிழ் வளர்த்த சங்ககால அரசர்களில் பலர் புலவர்களாகவும் இருந்துள்ளனர். அவர்களை அரசப்புலவர்கள் என அழைப்போம். அவர்கள் அரசர்களாகவும் புலவர்களாகவும் திகழ்ந்தவர்கள் என்பது நன்கு விளங்கும். புலமையிலேயே தம் வாழ்நாள்போக்கி வாழ்ந்த புலவர்களும் சங்ககாலத்து இருந்தனர். அவர்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலாயவர்கள். அவர்களை வேண்டுமானல் புலமையரசர்கள் என்று கூறலாம். புலமைத் தன்மையில் அவர்கள் அரசர்களாய் வாழ்ந்தனர் எனலாம். அவர்கள் சங்க காலத்தில் முடிசூடா மன்னர்களாய் விளங்கி எல்லாமக்களின் உள்ளத்திலும் உறைந்திருந்தனர். ஈண்டு யாம் குறிக்கும் அரசப்புலவர்கள் அரசர் குடியில் பிறந்து வளர்ந்து நாட்டை

யாண்டு புலமையறத்திலும் திளைத்துத் தம்புலமையைச் சங்கப் பாடல்கள் மூலம் நிலைநிறுத்திப்போந்தனர். இவ்வரசப்புலவர்களின் பாடல்கள் புலமையரசர்களின் பாடல்களுக்குக் கருத்தில் குறைந்ததாகக் காணப்படவில்லை. சிற்சிலவிடங்களில் விஞ்சியும் காணப்படுகின்றனர். அரசப்புலவர்கள் என்னுந்தொடர் 'புலமையிலே உயர்ந்தவர்கள்' என்னும் பொருளையும் சிந்தித்துப் பார்ப்பார்க்குத் தந்து நிற்பது காணப்படும். நிற்க.

நற்றிணையில் காணப்படும் 400 பாடல்களையும் 175 புலவர்கள் பாடியுள்ளனர். அவர்களில் அரசப்புலவர்களாகக் காணப்படுகிறவர்கள் தொகை பத்து. அவர்களின் பெயர் (1) அறிவுடை நம்பி (2) இளந்திரையன் (3) உக்கிரப் பெருவழுதி (4) செம்பியனார் (5) நம்பிகுட்டுவனார் (6) பாண்டியன் மாறன்வழுதி (7) பெருவழுதி (8) மருதம்பாடிய இளங்கடுங்கோ (9) பாலை பாடிய பெருங்கடுங்கோ (10) முடத்திருமாறன். அவர்களுள்ளே பாண்டியன் மாறன்வழுதி என்பவன் நற்றிணையைத் தொகுத்தவன் என்பர். எனவே அவன் பாடலை முதலாகக் கொண்டு அரசப்புலவர்களின் கருத்துக்களைத் தொகுத்து ஆராய்வோம்.

நற்றிணை அகப்பொருளை விளக்கும் நூலாகையால் களவு, கற்பு எனப் பிரித்து முதலில் களவொழுக்கம் பற்றிக்காண்போம். தலைவியின் தோற்றப் பொலிவைப் பாண்டியன் மாறன் வழுதி தன்பாடல் மூலம் காட்டுவது காண்க.

உடல் பெரிய மலையில் வளர்ந்த குறிஞ்சி மரத்தில் மலர்ந்த புதிய மலரைப் போன்றது. கண் பெரிய சுனையில் இரட்டையாக மலர்ந்த குவளைப் பூப்போன்றன. சாயல் மயிலின் தன்மையை ஒத்தது. சொல் சிவந்தவரிவையுடைய கிளியின் தன்மையை ஒத்தது. தோள் மூங்கிலைப் போன்றன. வனப்பு கொல்லிப்பாவை போன்றது. கூந்தல் அகிலினெய் பூசப்பட்டு வாசனையுடையது. பெற்று வளர்த்ததாய் தன் மகளின் அழகைக் கண்டு மகிழ்ந்து பாராட்டும் தன்மையது இவள் வனப்பு என்றால் யாம் யாது கூறுவேம்? உள்ளன்போடு, ஆசை நெஞ்சத்தோடு தாய் பாராட்டுவாளாம்; மறக்கமாட்டாளாம்.

நீள் மலைக் கலித்த பெருங்கோற் குறிஞ்சி
நாள்மலர் புரையும்மேனி, பெருஞ்சுனை
மலர் பிணைத்தன்ன மாஇதழ் மழைக்கண்,
மயில் ஓரன்ன சாயல், செந்தார்க்
கிளி ஓரன்ன கிளவி, பணைத்தோள்,
பாவையன்ன வனப்பினள், இவள் எனக்
காமர் நெஞ்சமொடு பல பாராட்டி
யாய் மறப்பு அறியா மடந்தை
தேம் மறப்பு அறியாக் கமழ் கூந்தலளே.

எனப்பாண்டியன் மாறன் வழுதி (நற் 301) பாடுவது காண்க.

"அணை மருள் இன்துயில் அம்பணைத் தடமென் தோள்
துணை மலர் எழில் நிலத்து ஏந்து எழில் மலர் உண் கண்

என்ற பாலைக்கலி 13ஆம் பாடலைத் தோளுக்கும் கண்ணுக்கும் ஒப்பு நோக்கி இன்புறுக.

'கிளிபுரை கிளவியாய்' என்ற பாலைக்கலி 12ஆம் பாடல்வரி 'சொல்'லுக்கும் 'மெல்லவியலும் மயிலும்' என்ற குறிஞ்சிக்கலி 19-ஆம் பாடல் வரி சாயலுக்கும் ஒப்பு நோக்கியறிக.

இன்னபிற அழகுடைய பெண் ஒருத்தியை ஒத்த குலம், ஒத்த அழகு முதலிய பத்துவகை ஒப்புடைய ஆண்மகன் ஒருவன் கண்டு காதலித்தான். மங்கையும் மனமொத்தாள். ஒருவரை ஒருவர் இன்றியமையாதவர் ஆயினர். அவர்களிடையே அன்பு வளர்ந்தது. நாடோறும் அன்புப் பயிர் அவர் கலந்துறவாடலால் வளர்ந்து செழித்தது. ஒருவரை ஒருவர் ஒரு நாளில் காணாமலோ உரையாடாமலோ இருக்க முடியாத நிலையடைந்தனர். கடிமணம் புரிய, காலத்தை எதிர்நோக்கியிருந்தனர். காலம் அவர்கள் கையில் அகப்படாமல் கடந்து கொண்டே வந்தது. அவர்கள் நட்பைத் தோழி அறிந்தாள், தலைவன் நிலைமையை அறிந்தாளாதலின் மகிழ்ந்திருந்தாள். மணத்தைத் தூண்டும் காரியம் செய்து வந்தாள். எனினும் நாள் நீட்டிக்

கொண்டே சென்றது. ஒரு நாள் தலைவனைப் பார்த்துத் தோழி சொன்னாள்.

"முழங்கும் அலைகளால் ஒன்று சேர்க்கப்பட்ட பெரிய மேடாயிருக்கும் மணல், நுண்ணிய துகிலின் நுடக்கம் போல ஊதைக்காற்றால் கூட்டம் கூட்டமாகத் தூற்றப்படும் பரந்த நீரையுடைய கடற்கரைத் தலைவனே! நீ பூவை யொத்த புதிய எம் நலத்தை உண்டு நுகர்ந்தாயெனினும் எம் துயரத்தை அறியவில்லை. நாங்கள் நேர்மையான நெஞ்சத்தோடு இருந்தும் வருந்துகிறோம். குற்றமற்ற கற்புடைய ஒருத்தி குழந்தையைப் பேய் கவர்ந்து கொண்டுபோக அவன் இழந்து வருந்துவதுபோல நாங்கள் வருந்தி எம்மோடு நெடுங்காலமாக வந்த நாணத்தையும் கைவிட்டு வாழ்ந்திருக்கிறோம். இனி இவ்வூர் அலர் தூற்றுவதாக".

தோழி தலைவனை அடை கொடுத்து விளிக்கும் போதே நிலைமையை விளக்கி விட்டாள். பின்னும் தோழி தலைவன் அறியாமையையும், தமது துயரத்தையும், ஊரார் கொக்கரிப்பையும் தெளிவு படுத்தாமல் விடவில்லை. தெளிவு படுத்தி, மேல் நிகழ வேண்டியதைத் தலைவன் உய்த்துணர்ந்து விரைவில் செய்து முடிக்கக் குறிப்பெச்சமாக விட்டு விடுகிறாள்.

இக்கருத்தை அமைத்துப் பாடலாகப் பாடிய அரசன் பெயர் அறிவுடைநம்பி. இவ்வரசன் இயற்றியதாகச் சங்க இலக்கியத்தில் நான்கு பாடல்கள் காணப்படுகின்றன. அகநானூற்றில் ஒன்று, குறுந்தொகையில் ஒன்று, புறநானூற்றில் ஒன்று, நற்றிணையில் ஒன்று, ஆக நான்கு பாடல்கள். ஒவ்வொன்றும் சிறந்த புலமை நிறைந்த பாடலாகக் காணப்படுகின்றது. ஈடும் எடுப்புமற்ற பாடல்கள் என்று சொன்னால் மிகையாகாது. அறிவினை நிச்சநிரப்புக்கொல்லும் என்பது திருவள்ளுவர் கருத்து. வறுமையற்ற நிலையில் இவ்வரசன் வாழ்ந்து அறிவுச் செல்வத்தைத் தேடியடைந்தான் போலும், இவன் பாடல் ஒவ்வொன்றும் அறிவு பொதிந்துள்ளதாகக் காணப்படுகிறது. இவன் பாட்

டைத் துய்த்த சான்றோர் இவனுக்குள்ள நம்பி என்ற பெயரோடு அறிவு என்னும் அடை மொழியையும் சேர்த்து அறிவுடைநம்பி என அழைத்து மகிழ்ந்தனர் என்று கொள்ளலாம். இவனது நற்றிணைப் பாட்டைக் காண்க.

முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்
நுணங்கு துகில் நுடக்கம்போல, கணம்கொள
ஊதை தூற்றும் உரவு நீர்ச் சேர்ப்ப!
பூவின் அன்ன நலம் புதிது உண்டு
நீ புணர்ந்தனையேம் அன்மையின், யாமே
நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி
மாசுஇல் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம், அலர்க இவ்வூரே. (நற் 15)

[வரைவு நீட்டித்தவழி, தோழி தலைமகற்குச் சொல்லி வரைவு கடாயது]

இப்பாட்டில் இரு உவமைகள் வந்துள்ளன. ஒன்று 'நுணங்கு துகில் நுடக்கம் போல' என்பது. மற்றது 'குழவியைப் பேய் வாங்கக் கை விட்டாங்கு' என்பது. முதல் மூன்று வரிகளிலே தலைவன் நிலை, தலைவி நிலை, ஊரின் நிலை சொல்லப் பட்டு விட்டன. எஞ்சிய ஏழுவரிகளில் முன்னையவற்றிற்கு விளக்கம் தரப்படுகிறது. 'முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்' தலைவன். 'நுணங்கு துகில் நுடக்கம்' தலைவி. 'கணங்கொள ஊதை தூற்று'வது ஊர். எக்கர், துகில், ஊதை முறையே தலைவன் தலைவி, ஊர் எனக்கொள்க.

மூரி என்ற சொல் பெருமை எனப்பொருள்படும் பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல். 95) என்னும் சூத்திரக் கருத்தோடு பொருந்தியிருப்பது காண்க. "முழங்குதிரை" என்ற தொடர் இசையுள்ள குடி என்பதைக் குறிக்கும். புகழமைந்த குடியிற் பிறந்து பெருமையோடு கூடிய தலைவன் என்பது கருத்தாகக் கொள்க. 'உரவு நீர்ச்சேர்ப்ப' என்னும் தொடரை உர

வுச்சேர்ப்ப எனக் கொண்டு கூட்டி 'உரவு' என்பதைத் தொல்காப்பியச் சூத்திரச் சொல்லோடு ஒப்பு நோக்குக. ஆகவே தொல்காப்பியர் கூறிய இருசொற் கருத்தையும் தன் தலைவனுக்கு ஆக்கிய பெருமை பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் சீரிய கூரிய மதியுடைய செம்மலுக்குச் சேரும்.

துகில் என்ற சொல் வெள்ளை நிறமான ஆடையைக் குறிக்கும். கள்ளங் கபடமற்ற உள்ளத்தினள் தலைவி என்பதே அச்சொல் தரும் குறிப்பு. நுணங்கு என்பது நுண்மை. வேலைப்பாடு என்னும் கருத்து. இங்கே தலைவியின் அழகைக் குறிக்கும். நுடக்கம் என்பது மடங்கிக் கிடப்பது. தாய் தந்தை தன்னையருக்குத் தலைவி அஞ்சிக் கிடக்கின்றாள். 'மாசு இல் கற்பின் மடவோள்' என்ற தொடரிலுள்ள மடம் என்பதையும் 'சேணும் எம்மொடுவந்த நாணும்' என்ற தொடரிலுள்ள நாண் என்பதையும் தலைவிக்கு ஏற்றி அச்சம், மடம், நாண் என்ற முக்குணங்களும் தலைவிபால் இருந்தன என்று கொள்க. இம்மூன்று குணங்களும் பெண்பாற்பட்டன என்னும் தொல்காப்பியம்.

அச்சமும், நாணும், மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப. (தொல் 96)

இம்முக்குணங்களையும் தன் தலைவிக்கு ஏற்றிப்பாடிய பெருமை அறிவுடைநம்பியைச் சாரும்.

ஊதை என்பது காற்று. இங்கே ஊர்மக்களைக் குறிக்கும். தூற்றும் என்பது பரப்பும் என்று பொருள்படும். ஊரார் அலர் தூற்றுவர் என்பது கருத்து.

தலைவி துகில்போல நுடங்கிக்கிடக்க, ஊதைக்காற்று மணலைத் தூற்றுவதுபோல, தலைவனோடு சேர்த்து ஊரார் அலர்தூற்றுவர் என்ற கருத்து விளங்கும்படி அறிவுடைநம்பி தன் பாட்டின் மூன்றே வரிகளில் தன் கருத்தைத் தெரிவித்த திறமை அறிவுடையார் அறிந்து இன்புறத்தக்கது.

266-ஆம் பக்கத்தொடர்ச்சி

<u>இலக்கியத் திறனாய்வு.</u>

இலக்கியமும் வாழ்க்கையும்

[பேராசிரியர் நா. பாலுசாமி எம். ஏ.]

உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடை
கழைதின் யானை காலகப் பட்ட
வன்திணி நீள்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொறேஎ னாயின் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடை குழைக வென் றாரே.

இப்புறப்பாட்டால் கிள்ளியின் கொடையாண்மையும் படையாண்மையும், நடையாண்மையும் நன்கு புலப்படுகின்றன வன்றோ?

இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்குமுள்ள தொடர்பினை டாக்டர் ஜான்சன் பின்வருமாறு கூறுகிறார். ''ஒரு கவிஞன் மக்களின் வாழ்க்கைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியாகவே தனது இலக்கியத்தை உருவாக்குகின்றான். அவன் தனது காப்பியத்துள் படைக்கும் பாத்திரத்தின் பழக்க வழக்கங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்குரியனவாக இருப்பதில்லை. உலகின் பல்வேறு பகுதியிலிருக்கும் மக்களும் பெரும்பாலும் அவற்றைப் பின்பற்றக்கூடிய நிலையிலேயே அவை அமைகின்றன. உலக மக்கள் பொதுவாகத் தமது வாழ்க்கையில் எத்தகைய உணர்ச்சிகளையும் கொள்கைகளையும் கொண்டுள்ளார்களோ, அவற்றையே கவிஞனால் உருவாக்கப்படும் நாடக உறுப்பினரும் பெற்றிருக்கின்றனர். காப்பியத்திற்குத் தன்னேரில்லாத் தலைவன் வேண்டுமென்பர். அத்தகைய தலைவனும் அல்லது தலைவியும் உலகில் வாழும் பிற

ஆடவர், பெண்டிர் போன்றே சிற்சில குறைபாடுடையராகக் காட்சியளிப்பது காணலாம். ஒரு சிறந்த கவிஞன் சேய்மைக் காட்சிகளை எல்லோரும் கண்டு மகிழத்தக்கவாறு அணிமைக் காட்சிகளாக மாற்றிக்காட்டி விடுகிறான். உலகியற்கு அப்பாற்பட்ட வியத்தகு பெருநிகழ்ச்சிகளையும் கூட, நமக்குப் பழக்கப்பட்ட எளிய காட்சிகளாக அமைத்து விடுகிறான். இவ்வாறு, இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூட வாழ்க்கையோடு இணைத்துக் காட்டுவதில் கவிஞன் இணையற்று விளங்குகிறான். இளங்கோவடிகள் தரும் பின்வரும் சேய்மைக் காட்சிகளைக் காண்க.

சேரன் செங்குட்டுவன் பேரியாற்றங்கரையில் தேவியுடன் வீற்றிருக்கிறான். அப்பொழுது அவரைச் சுற்றிலும் சேய்மைக்கண் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளை அடிகள் சித்தரித்துள்ளனர். பன்னூறு ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த அஃது. இன்றும் நாம் படிக்குந் தொறுந் தொறும் நம்மைச் சுற்றி நிகழ்வதாகவே அமைந்திருக்கும் மாண்பு அறிந்து மகிழத்தகும்.

"குன்றக்குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும், புனத்தெழு விளியும்
நறவுக்கண் உடைத்த குறவர் ஓதையும்
புலியொடு பொருவும் புகர்முக ஓதையும்
கலிகெழு மீமிசைச் சேணோன் ஓதையும்
பயம்பில்வீழ் யானைப் பாகரோதையும்
இயங்குபடை அரவமோடு யாங்கணும் ஒலிப்ப
அளந்து கடையறியா அருங்கலம் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி".

இத்தகைய பல்வேறு ஒலிகளும் நம்மைச் சுற்றிலும் இன்றும் எழுவதாக உணர்கிறோம் அல்லவா? இனி வியப்பு நிகழ்ச்சிக்த ஓர் எடுத்துக்காட்டு:

கணவனை இழந்து, மதுரை நீங்கிச் சென்ற கண்ணகி வையைக் கரை வழியே போந்து, செங்குன்றமடைந்து பதினான்காம் நாளில் தேவேந்திரனோடு வான வூர்தியில் வந்து காட்சி தந்த

தன் கணவனோடு தெய்வவடிவில் சென்றனர் என்ற செய்தியைச் சித்தரிக்கிறார் இனங்கோவடிகள். அஃது ஒரு வியத்தகு நிகழ்ச்சியேயாயினும், அதனைக் கேட்கின்ற காலை வெருவி ஓடாது, விரும்பிச் சுவைக்கத் தக்கதொரு பழகிய செய்தியாகவே அமைத்திருக்கும் திறன் பாராட்டற்குரியது.

"நெடுவேள் குன்றம் அடிவைத் தேறி
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி
எழுநாளிரட்டி எல்லை சென்றபின்
தொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்தி
பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசர் தமர்வந் தேத்த
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி ஏறினள் மாதோ
கானவர் புரிகுழற் கண்ணகி தானென்"

இறுதியாக வால்டர் பேட்டர் என்பார் வாழ்க்கையும் இலக்கியமும் என்பது பற்றிக் கூறும் கருத்து நோக்கற்பாலது. இப்பேரறிஞரும் அரிஸ்டாட்டிலைப் போன்றே பிளேட்டோவின் கருத்தை மறுப்பதோடன்றி அவர் தம் ஓவிய எடுத்துக்காட்டை வன்மையாகக் கண்டிக்கிறார். ஓவியத்தில் ஒரு சமயத்தில் ஓர் உருவத்தின் ஓர் இயல்பையே உள்ளவாறு அறிதல் கூடும். காவியத்திலோ ஓர் உறுப்பினரின் பல்வேறியல்புகளையும் அறிந்து கொள்ளத்தக்க வியப்புகளும், சூழ் நிலைகளும் மிகப்பலவாக அமைகின்றன. சுருங்கக்கூறின், ஓவியம் பேசாப்படம்; காவியம் பேசும்படம். இதுகாறும் கூறிய செய்திகளை நோக்க, இலக்கியம் வாழ்க்கையைப் பின்னிப் பிணைந்தே நிற்கிறது என்பது புலனாகும்.

"கலை கலைக்காகவே"

[பேராசிரியர் நா. பாலுசாமி எம். ஏ.]

இத்தலைப்புப்பற்றி இருவகைப்பட்ட கருத்துக்கள் உலவுகின்றன. இருசாராரும் இலக்கியம் ஒரு கலை என்பதில் வேறுபாடு கொண்டிலர். ஆயின். ஒரு சார் ஆராய்ச்சியறிஞர், 'இலக்கியமாயினும் ஆகுக, பிற கலைகளாயினும் ஆகுக, கலை என்பது கலையின்பத்திற்கே' என்பர். இவர்களை இன்பவாதிகள் (Pleasure lovers) என்பர். இவர்களுக்கு அழகுணர்ச்சியே இன்றியமையாதது. அதுவே இலக்கியத்தின் முதலும் முடிவும் ஆகும் என்பது அவர்தம் கருத்து. அவர்களுக்கு இலக்கியம் அல்லது கலை ஒரு போதைப் பொருளாகும்.

பிறிதொருசார் அறிஞர், இலக்கியம் அல்லது கலை, வாழ்வுக்குரிய சட்டகமாக அமைதல் வேண்டுமென்பர். மக்கள் வாழ்க்கையையும், அவர்தம் போக்கையும்நோக்கையும் ஓர்இலக்கிய ஆசிரியன் அல்லது கலைஞன் பெரிதும் வழிப்படுத்துகின்றான் என்பது அவர்தம் கருத்து. ஆதலால் ஓர் இலக்கியத்தின் தாக்குதல் (Impact) நேர்மையுடையதாக இருத்தல் வேண்டும்; படிக்கின்றவர்களின் கவனத்தைத் தீய வழிகளிலே திருப்பும்படியான நிலையிலமைதல் கூடாது. இலக்கியம் அல்லது கலை மனித இனத்தின் அமுதமாகலாம்; அன்றி நஞ்சாகவும் மாறலாம். இவ்வகை அறிஞரை அறவாதிகள் அல்லது ஒழுக்கவாதிகள் (Puritans or Moralists) என்பர்.

மேலேகண்ட இருவகைக்கருத்துக்களுள் கலை கலைக்காகவே எனக் கழறும் இன்பவாதிகளின் கூற்றை நோக்குவோம். இக்கொள்கை பிரஞ்சு நாட்டில்தான் முதன் முதலாகக் கால் கொண்டது. இக்கொள்கையின்தந்தை விக்டர்கசின் (Victor cousin) எனக் கருதப்படுகிறார். இவரது காலம் கி. பி. 1792-1867. ஆனால் இக்கொள்கையை வெளிப்படையாக முதன் முதல் அம்

பலத்திற்குக் கொணர்ந்தவர் காசியர் (Gautier) என்னும் அறிஞர் ஆவார். அவர் பின் வருமாறு முழங்கினார்;

"இலக்கியத்தில் அல்லது கலையில் ஒழுக்கம் அல்லது அறமுறை இல்லை என்பது மட்டுமன்று; அஃது அவற்றிற்கு அடியோடு மாறுபட்டதும்ஆகும்" ("Art is not merely a-moral but antimoral") மேலும் அவ்வறிஞர் தனது கோட்பாட்டைப் பின்வரும் எடுத்துக்காட்டால் விளக்குவது காண்க. "ஒரு நகரம், அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களின் அமைப்பு முறையினாலேயே என்னை ஈர்த்து இன்புறுத்துகிறது. அங்குக் குடியிருப்போர் போக்கிரிகளாயினும், அன்றி, அந்நகரமே பழியின் நிலைக்களனாக விளங்கினாலும், அவை பற்றி யான் கவலைப்படப் போவதில்லை, ஏனெனில், அந்நகரின் வளமனைகளை நான் அண்ணாந்து நோக்குங்கால் நான் கொல்லப்படாதிருத்தல் ஒன்றேசாலும்" ("A town interests me merely for its buildings; let the inhabitants be utterly vile and the town a haunt of crime. what does this signify to me so long as I am not assasinated while looking at the buildings.") அவ்வையார் பாடலொன்று இவண் ஒப்பு நோக்கற்பாலது.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

மேலும்,

"பொதியிலாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"

என்ற இளங்கோ வடிகளின் கலைச்சித்திரம் காசியரின் கவின் சித்திரத்தினும் எத்துணை விழுமியது காண்க!

பிரஞ்சு நாட்டின் பிறிதோர் ஆராய்ச்சியாளரான ரேனன் (Renan) என்பார் மேற்கண்ட கொள்கையை முழுக்க முழுக்க ஆதரித்தார். இலக்கியம் முதலியகலைகளுக்கும்நடைமுறை வாழ்க்கைக்கும் இடையே பேரிடைவெளி உண்டு என்பது அவர்தம் அசைக்கமுடியாத கருத்து. அந்நாட்டின் மற்றோர் அறிஞரான பிளாபர்டு (Flaubert) இக்கொள்கையில் மிக்க நம்பிக்கையுடையவர். இதுகாறும் எந்த உயர்ந்த கவிஞனும், இலக்கியத்தினின்றும் உயர்ந்த வாழ்க்கை முடிவுகளைக் கண்டானல்லன். (No great poet has ever drawn conclusions) என்பது அவரது கடைப்பிடி. வாடிலேர் (Vaudelaire) என்னும் அறிஞர் "செய்யுள் அல்லது இலக்கியம் எந்த ஒரு முடிந்த பயனையும் தன்பால் கொண்டு விளங்கவில்லை. யாரேனும் ஒரு கவிஞன், தன் இலக்கியத்தின் வாயிலாக ஓர் ஒழுக்க முடிவினை வற்புறுத்துவானாயின், அவன் அந்த அளவிற்கு அதன் இலக்கியப் பண்பினை-ஆற்றலை இழந்துவிடுகிறான். அதன் விளைவு பெரும்பாலும் அவனைப் பாதிக்கக் கூடியதே" என்றுகூறுகிறார். வெர்லேன் (Verline) எனும் மற்றோர் அறிஞர் "கலைக்கும் ஒழுக்கத்திற்கும் யாதோர் தொடர்புமில்லை என்பது மட்டுமன்று; அஃது அதற்கு முரணானதும்கூட" என்பர். மேலும் அவர் கூறுகிறார்: ஒழுக்க வளர்ச்சிக்குக் கலை அல்லது இலக்கியம் சிறிதும் பொறுப்புடையதாக இருத்தல் கூடாது என்பது என் விருப்பம். அப்பொழுதுதான் நான் யாதோர் அச்சமும் இன்றிப் பிறர் இடுக்கண் கண்டு இறும்பூது எய்த முடியும்; யான் பிறரால் துன்புறுத்தப்படும் போதும் நிந்திக்கப்படும் போதும் ஒரு வகை இன்பம் பெறவியலும்; அல்லது தாய் தந்தையரின் அடக்குமுறையால் விளையும் அச்சத்தை எதிர்த்துத் தொழில்பட முடியும். இவ்வாறு பொறுப்பற்ற நிலையில் பேசினார். (I wish art to be irresponsible in order that I may indulge in without reproach my sadism, my masochism, and my anti-parental neurosis.)

இவ்வாறு 18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு நாட்டில் தோன்றிய இக்கொள்கை 19-ஆம் நூற்றாண்டில் வேரூன்றி, தழைத்து

கடல் கடந்து ஆங்கில நாட்டில் பரவத் தொடங்கியது. அந்நாட்டில் அக்கொள்கையைப் பரப்பத் தொடங்கியவர் ஸ்வின்பர்ண் (Swinburne) என்பவர் ஆவர். ஆனால் அதை நாடறியச்செய்த பெரும்புள்ளி வால்டர் பேட்டர் (walter poter) என்பவர். அவர் கூறினார்: ஒருவனுடைய அனுபவத்தின் விளைவு இலக்கியத்தின் முடிபு அன்று; அவன்துஅனுபவமே அதன் முடிபாகும். அவ்வறிஞரின்தத்துப்பிள்ளையாகவிளங்கியவர் ஆஸ்கார் ஒயில்டு என்பவர். "நூல்களில் நீதி நூல்கள், நீதியற்ற நூல்கள் எனப் பாகுபாடு இல்லை; அற நூல்கள், மறநூல்கள் எனப் பகுப்பதுமில்லை. நன்கெழுதப்பட்ட நூல்கள், நன்கெழுதப்படாத நூல்கள் என்ற பகுப்பே உண்டு. அவ்வளவே நூல்களைப் பற்றி. எந்தக் கவிஞனும் அல்லது கலைஞனும் ஒழுக்கத்தின்பால் பரிவுடையவன் அல்லன். அங்ஙனம் அவனிருப்பின் அது மன்னிக்க முடியாத ஒரு சேட்டை. எல்லாக் கலைகளும் இறுதியில் பயனற்றவையே" இவ்வாறு கூறினார் ஆஸ்கார் ஒயில்டு. (There is no such thing as moral or immoral book; books are well written or badly written: that is all. No artist hat ethical sympathies. An ethical sympathy in an artis is an unpardonable mannerism. All art is quite useless) இதுகாறும் கூறியவற்றால் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் கலை கலைக்கே என்ற கொள்கை வளர்ந்த வரலாற்றைத் தெரிந்து கொண்டோம். இனி அக்கொள்கையின் வீழ்ச்சிபற்றிச் சிறிது காண்போம்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இக்கொள்கையின் வீழ்ச்சி தொடங்கியது. பல மெய்யறிவாளர் தோன்றி இக்கொள்கைபற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். கலைக்கு அல்லது இலக்கியத்திற்கு ஓர் உயர்ந்த குறிக்கோளுண்டு என்பதனை மேலைநாடுகளில் வாழ்ந்த மெய்யறிஞர், சமயஆசிரியர், மதவாதிகள் முதலானோர் பெரிதும் வற்புறுத்தினர். இலக்கியத்திற்கும் ஒழுக்கத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதும், அறம் முதலாகிய முப்பொருள்களை அது பயக்கும் என்பதும் நீண்டகாலமாகச்

சமுதாயத்தில் நிலவிய கொள்கையாம். இதற்கு மாறுபட்ட மயக்கக்கொள்கை காளாம்பிபோல இடைக்காலத்தே பூத்து காய்க்காது ஒழிந்த கருக்காயாகும். கலையின் பிறப்பிடமே விளையாட்டரங்கம். பறவைகளும்கூட ஒரு குறிக்கோளை முன்னிட்டே பாட்டிசைக்கின்றன. புகழ்ச்சி விரும்பாத பூக்களும் தமது செயலைத்தாம் அறியாமலே தமக்கு ஒருவித விளம்பரத்தைத் தேடிக்கொள்கின்றன. அப்பூவின் செயலிலும் ஒரு குறிக்கோள் உளது. சீனநாட்டு மூதறிஞரான கன்பூசியசு என்பார் 'கலை கலைக்கே' என்னும் கொள்ளகையைச் சிறிதும் கருதினாரல்லர். அவர் கூற்று பின்வருமாறு; ஒரு மனிதன் 'இம்' என்னும் முன்னே ஆயிரம் பாடல்களை ஆக்கவும், மனத்திலமைக்கவும் செய்யலாம். அதுகொண்டு அவன்பாலமைந்த கலை கலையாகி விடாது. அவனை ஓர் அரசாங்க அலுவலில் அமர்த்தினாலோ, தொலை நாடுகளுக்குத் தூதனுப்பினாலோ, ஆண்டெழும் தனிப்பட்ட வினாக்கட்கு அவனால் விடை பகர முடியாது. கலை கலைக்காகவே என்றால் அக்கலையை முயன்று கற்போனுக்குப் பயன்தான் யாதோ?" கிரேக்கத்துப் பேரறிஞரான பிளேட்டோ கலை கலைக்கே என்னும் கொள்கையின் பகைவராவர். கலை கலைக்கே என்பவர் வாழ்க்கையின் உண்மை இயல்புகளை அறியாதவர்! கலை அல்லது இலக்கியம் வாழ்க்கையின் போலிச் சாயலேயன்றி உண்மையான நடைமுறை வாழ்க்கை அன்று என்பது அவரது கருத்தாக இருப்பினும், கலை அல்லது இலக்கியம் ஒரு குறிக்கோளை உடையது என்பதில் அவருக்குக் கருத்து மாறுபாடு இல்லை. இலக்கியம் சமுதாயத்தை ஆட்கொள்கிறது; என்றாலும் அது பெரும்பாலும் சமுதாயத்தைச் சீரழிக்கும்படியான தீய வழிகளிலேயே மக்களை ஈர்க்கிறது. ஆகவேதான் பிளேட்டோ தான் கனவுகண்ட அரசியலமைப்பில் கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் இடம் தர மறுத்தார். (He strongly held that imaginative literature was an intellectual Freud and an emotional debauche. But he did recognize the influence-value of literature and even thought that influence-value was almost wholly corrupt and c-or

ruptive). அவர் மாணவராகிய அரிஸ்டாட்டில் இலக்கியத்தில் ஒழுக்கக் கூறுபாடுகளைப் பெரிதும் வற்புறுத்துவாராயினர். ஒரு நல்ல நாடகத்தில் தோன்றும் நாடகமாந்தர் கூடுமானவரை உயர்ந்தவர்களாகவும் ஒழுக்கத்திற் சிறந்தோராகவும் இருக்குமாறு கதைப் போக்கையமைத்தல் வேண்டும். அதற்கு மாறாகப் பார்வையாளர் உள்ளங்களை மிகவும் இழிந்த துறைகளில் செல்லவிடுதலும் அவர்தம் உணர்ச்சிகளைத் தீய வழிகளில் செலுத்துதலும் தடுக்கப்பட வேண்டும். லாங்கினஸ் (Longinus) எனும் மற்றொரு பேரறிஞர். "ஓரிலக்கியம் அல்லது கலை ஓர் உயர்ந்த உள்ளத்தினின்றும் கிளம்பும் எதிரொலியே ஆகும்" என்பாராயினர். (To him literature was the echo of great soul) சர் பிலப்சிட்னி என்பவர் தாம் எழுதிய 'Apologie for poetrie' என்ற நூலில் ஒரு நாட்டிலே தோன்றும் மெய்யறிஞர்களை விட இலக்கிய ஆசிரியர்களே மக்களை மக்களாக ஆக்குவதில் கைதேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (Compare Tirrukkural with any philo sophical treatise) ஆங்கிலப் பேரறிஞர் ஜான்சன், இலக்கியத்தில் ஒழுக்கக்கூறுபாடு என்பது பற்றிப் பேசுங்கால் பின் வருமாறு கூறியுள்ளார். உலகம் புகழும் செகப்பிரியர் நாடகங்களின் வாயிலாக ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையும் பொருளாதார அமைப்பையும் நாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு எனினும் அந்நாடகக் கவிஞர் தம் நூல்களின் வாயிலாக ஒழுக்கத்தைப் போதிக்கும் கருத்தினராகத் தோன்றவில்லை." இக்கருத்துரையிலிருந்து ஜான்சனது கொள்கை நன்கு விளங்கும். அவர் மேலும், "ஓர் இலக்கியத்தின் பயன் அதனைக் கற்பவர் வாழ்க்கையை நன்கு அனுபவிக்க வேண்டுமென்பதனையும், வாழ்க்கையில் தோன்றும் இடுக்கண்களைப்புன்முறுவலோடு பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பதனையும் போதிப்பதேயாகும்" என்று கூறுகிறார். (The only end of writing is to enable the reader better to enjoy life or better endure it) [இடுக்கண் வருங்கால் நகுக, அதனை யடுத்தூர்வது அஃதொப்பதில்]

இயற்கை நூற்புலவராகிய வேட்ஸ்வொர்த், "நான் மாசு போக்கும் ஆசிரியனாதல் வேண்டும். அன்றேல் பிறந்ததனாலாய பயன் என்ன என்று பெருமிதத்தோடு கூறினர். (I am nothing if not a teacher) கவின்கலைச் செல்வராகிய கீட்ஸ் என்பார் யாதொரு பொருளிலும் அழகினைக் கண்டு மகிழ்பவர். அதுவே அவருக்குப் பேரின்பம். அவரும் இலக்கியம் பற்றிக் கூறுங்கால், "இலக்கியம் மனிதனுக்கு நண்பனாயிருத்தல் வேண்டும். அவன் கவலைகளை ஒழிக்கும் மருந்தாக விளங்குதல் வேண்டும். அவன் றன் எண்ணங்களை விழுமிதாக்க வேண்டும்" என்றுரைக்கின்ருர். (That it should be a friend to soothe the cares and lift the thoughts of man - sleep and poetry) இனி ரஸ்கின் எனும் பேரறிஞர் Modern paintars – Part III என்னும் நூலில் கலையைப்பற்றிக் கூறுவது கவனிக்கத்தக்கதாகும். கலை என்பது பொழுது போக்குக்கு உரியதன்று, ஓய்ந்த நேரங்களில் கற்றுக் கொள்ளத் தகுவதும் அன்று; பயன்தரத்தக்க யாதொரு வேலையுமில்லாதபோது கைக்கொள்ளத்தக்கதுமன்று. கலை வாழ்க்கையின் அடிப்படையாகும். இன்றேல் கலையுமில்லை, வாழ்வுமில்லை (Art properly so-called is no recreation. We cannot learn at spare moments, nor pursuie when we have nothing better to do. It must be understood and taken seriously or not at all)

பத்தொன்பதாம் நூற்ருண்டில் கலைத்துறையில் ஒழுக்கக் கூறுபாட்டினை வற்புறுத்திய மற்ருெரு பெரிய எழுத்தாளர் டால்ஸ்டாய் என்னும் ரசிய நாட்டறிஞர் கலையை அல்லது இலக்கியத்தை அதில் அமைந்துள்ள அழகு அல்லது அது தருமின்பவுணர்ச்சி என்பதனை அடிப்படையாகக்கொண்டு நோக்குதல்கூடாது. கலை ஒருவர் உட்கொள்ளும் உணவுக்கு ஒப்பானது. உணவின் சிறப்பை அதன் சுவையால் மதிப்பிடுதல் கூடாது அது உண்கின்றவனுக்கு எத்தகைய பயனைத் தருகிறது, அல்லது அவனது உடல் நலத்துக்கு அஃது எந்த அளவிற்கு உறுதுணை பயப்பதுஎன்பதன் அடிப்படையிலேயே உணவின் உயர்வையும் இழிவையும் அறிந்து கோடல்வேண்டும். [தொடரும்]

உலகச் சமயங்கள்

இ. பழநியப்பன்.

2. சப்பானியர் சமயம்:

உலகின் கிழக்கோடியிலுள்ள நாடு சப்பானாகும். அது பற்றியே அதற்கு 'உதய சூரிய' நாடு என்ற ஒரு பெரும் பெயரும் வழங்குகின்றது. நாலாயிரத்திற்கும் மேற்பட்ட தீவுகள் சேர்ந்ததே சப்பான் நாடு. அதிற் சுமார் ஐந்நூறு தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். மற்றவை மிகச் சிறிய திட்டுகளாகவும் எரிமலைகளாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு சப்பான் பல தீவுகளைக் கொண்ட நாடாக இருப்பதால் அங்குப் பெரிய நதிகளையும் மருத நிலங்களையும் காண்பதரிது. இந்நாடு சீனுவிற்கு மிக அண்மையில் இருப்பதால் சப்பானியர் பண்பாடும் பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் சீனமக்களுடையதைப் போன்றேயிருக்கும். கால அளவிலே இந்தியாவுடன் சப்பானை ஒப்பிட்டுப் பார்த்தால் அது மிக மிக அண்மையில் தோன்றிய ஒரு நாடாகும். இந்தியாவில் புத்தர் தோன்றி வாழ்ந்து வந்த காலத்தில் சப்பானியர் காட்டுமிராண்டிகளாக ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவதையே தொழிலாகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். சீனமக்கள் நாகரிகத்தின் உச்சநிலையை யடைந்து பல தத்துவ நூல்களை இயற்றி வந்த காலத்தில் சப்பானியர் மீன்பிடிப்பது வேட்டையாடுவது என்ற இரண்டைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர்களாக இருந்து வந்தனர், அப்பொழுது அவர்களைக் குள்ளர்கள் என்று சீனர் அழைப்பர். சப்பானியர்களுக்கு எழுதக் கற்றுக் கொடுத்தவர்கள் சீனர்கள்; அவர்களுக்குப் பற்பல கலைகளையும் கைத்தொழில்களையும் சமயத்தையும் கற்றுக் கொடுத்தவர்களும் சீனர்களேயாவர்.

சப்பானியரிடத்திலே காணப்படும் சிறந்த குணம் என்னவெனில் எதையும் கற்றுக்கொள்வதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருப்பதும், கற்றவைகளைத் தங்கள் பண்பாட்டிற்கு

ஒத்தவாறு மாற்றியமைத்துக் கொள்வதிலும் திறமையுடையவர்களாக இருப்பதுமேயாகும்.

காட்டுமிராண்டிகளாக வாழும் அறிவற்ற மூடர்களாகும் இவ்வுலகில் அவரவர்களுக்குத் தோன்றியவாறு ஒரு வகைக் கடவுள் நம்பிக்கையும் அதுபற்றிய ஒரு சில கொள்கைகளும் ஆதி முதல் இருந்து வந்துள்ளன என்பது வரலாறுகண்ட உண்மையாகும்.

2000 ஆண்டுகளுக்குமுன் சப்பானியர்களுக்கும் ஒருவகைச் சமயக்கொள்கை இருந்தது. அதற்குச் சிண்டோ (Shinto) என்று பெயர். சீனமொழியில் சிண்டோ என்றால் "நல்லாவிகளின் நெறி" என்பது பொருள்.

அக்காலத்தில் உலகம் என்பது சப்பான் நாடு ஒன்றுதான் என்று அவர்கள் கருதினர். அவர்கள் கண்களுக்குத் தோன்றிய ஒரு சில தீவுகளுக்கு அப்பால் பரந்த நீர்ப்பரப்பைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது என்பது அவர்கள்எண்ணம். வானம் மிக அண்மையில் இருப்பதாகவும், யாரோ ஒருவர் எய்த அம்பு வானத்தைத் துளைத்துவிட்டதாகவும், அத்துளை மூலமே உலகிற் காணும் உயிர்ப்பொருள்களெல்லாம் மேலுலகத்திலிருந்து வந்தன என்றும் அவர்கள் நம்பினார்கள். மேலுலகம் ஒன்று இருப்பது போல இந்த உலகிற்குக் கீழேயும் ஒரு உலகம் இருப்பதாகவும் அவர்கள் நம்பினார்கள். இந்த உலகத்திற்கும் கீழுலகத்திற்கும் ஒரு வழி இருந்துவந்தது என்றும் அது பல ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஒரு நில நடுக்கத்தினால் மூடப்பட்டு விட்டது என்றும் கருதினர். அதுபோல் மேலுலகத்திற்குச் செல்வதற்கும் ஒரு பாலம் இருந்ததென்றும் அதுவும் உடைந்து போனமையால் அங்குச் சென்று வருவதும் தடைபட்டு விட்டது என்றும் நம்பினர். அவர்கள் இயற்கையையே தெய்வமாகக் கருதி வழிபட்டனர். கோயில்களும் அர்ச்சகர்களும் கிடையா. மழை வேண்டுமென்றால் ஆற்றங்கரைக்குச் சென்று ஆற்றை வழிபட்டனர். மழை நிற்கவேண்டுமென்றால் சூரியனை நோக்கி வழிபட்டனர். அதுபோல் வேண்டும் பொழுதெல்லாம் சந்திரன், நட்சத்திரங்கள், மின்னல், இடி, மலைகள் காடுகள் முதலிய எல்லாவற்றையும் வணங்கி வந்தனர். மேலும் அவர்கள் அவர்களை ஆளும் அரசனையும் தெய்வமாக வணங்கினர். அரசனை அவர்கள் மிக்காடோ என அழைப்பர். மிக்காடோவைத் தெய்வமாகக் கருதிய பண்டைய சப்பானிய மக்களின் கொள்கை இன்றும் அவர்களிடத்தில் இருந்துவருகின்றது. இதற்குக் காரணம் இவ்வுலகம் எப்படித் தோன்றியது என்பதை விளக்கும் ஒரு புராணக் கதையில் அவர்களுக்கு உள்ள திடமான நம்பிக்கையேயாகும்.

இசாங்கி, இசநாமி என இரு தேவர்கள் மேலுலகில் இருந்தனர். ஒருநாள் அவர்கள் அங்குள்ள மிதக்கும் பாலமொன்றில் உல்லாசமாக உலாவிக்கொண்டிருக்கும்பொழுது அப்பாலத்தின் அடியில் என்ன இருக்கின்றது என்பதை அறிய விரும்பினர். உடனே இசாங்கி ஒரு நீண்ட ஈட்டியை எடுத்துப் பாலத்திற்குக் கீழே நீட்டித் துழாவிப்பார்த்தார். அவ்வீட்டி கீழே இருந்த உப்புநீர்க்கடல் வரை சென்று அதை கலக்கியது. இசாங்கி ஈட்டியை மேலே தூக்கும்பொழுது அதிலிருந்து பல உப்புநீர்த் துளிகள் கீழே விழுந்தன. அவைகள் கீழே சென்று கடலை அடைவதற்குள் காற்றினால் உறைந்து கடினப் பாறைகளாக மாறிக் கடலில் ஆங்காங்கு தீவுகளாக அமைந்துவிட்டன. அதுவே 4000-க்கு மேற்பட்ட சப்பான் தீவுகளாகும்.

இசாங்கியும் இசாமியும் அத்தீவுகளைக் கண்டு அங்குச் சென்று வாழ்வோம் என்று மேலுலகிலிருந்து இறங்கி வந்து வாழ்ந்தனர். அவர்களுக்குப் பிறந்ததே சூரியதேவதையும், சந்திர தேவனும், புயல்தேவனும். சூரிய தேவதையின் பேரன் சிம்முடென்னோ சப்பானின் முதல் அரசனாவான். அவனுடைய பரம்பரையினரே சப்பானின் அரசராக இருந்துவருகின்றனர். இன்றைய சப்பானிய அரசர் சூரியதேவதையின் 124-ஆம் பேரனாவார். இந்தப் புராணத்தின் அடிப்படையிலேயே சப்பானியர் அரசனை இன்றும் தெய்வமாக வழிபடுகின்றனர்.

இவ்வாறு அரசனையும் நாட்டில் காணும் மலைகளையும் நதிகளையும் இயற்கை வளங்களையும் தெய்வமாகக் கருதி வணங்கும்படிச் செய்த சிண்டோ சமயக்கொள்கையினால் சப்பான் அடைந்த மிகப்பெரிய நன்மை என்னவெனில் மக்களிடையே உள்ள நாட்டுப் பற்றேயாகும். நாட்டையும் அரசனையும் தங்களுக்கு வாழ்வு கொடுக்கும் தெய்வங்களாகக் கருதும் மக்கள் அவைகளைத் தங்கள் உயிரினும் மிக்கு ஓம்புவர் என்பதில் வியப்பொன்றும் இல்லை.

சப்பானியர்களுக்குச் சீனர்கள் எழுத்துக் கலையையும், விவசாயத் தொழிலையும், பட்டுநூல் நெசவுத் தொழிலையும் கற்றுக்கொடுத்ததன்றியில் தங்களிடமிருந்த கன்ப்யூசியசின் அறிவு நூல்களையும் கொடுத்து அவர்களுடைய அறிவை நல்ல முறையில் வளர்ப்பதற்கும் உதவினர்.

சீனாவில் புத்தர் சமயம் பரவி அங்கிருந்து அது கொரியா நாட்டிற்கும் சென்றது. 1300 ஆண்டுகளுக்கு முன் கொரியாவை ஆண்ட மன்னன் ஒருவன் சப்பானிய அரசன் மிக்காடாவிற்கு ஒரு பரிசு அனுப்பினான். பசும்பொன்னாலாகிய ஒரு புத்தரின் சிலையும், புத்த சமயக் கொள்கைகளை விளக்கும் ஏடுகளுமே அவன் அனுப்பிய பரிசுகளாகும். கொரியா மன்னன் அன்புடன் அனுப்பிய பரிசை அதற்குத் தக்க மரியாதையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மிக்காடோ எண்ணினான். ஒரு அழகிய கோயில் அமைத்தான். புத்தர் சிலையை அக்கோயிலில் வைத்தான். அதுவே சப்பானின் முதற் புத்தர் கோயிலாக அமைந்தது. இந்தியாவில் அரச பதவியைத் துறந்து ஆண்டியாகக் கிளம்பிய புத்தர் பெருமான் சப்பானில் விலைமதிப்பற்ற ஒரு தங்க உருவத்தில் நுழைந்தார். இதுபோன்றே புத்தரின் அடிப்படைக் கொள்கைகள், இமயத்தைத் தாண்டிச் சீனா, கொரியா, சப்பான் நாடுகளுக்குச் செல்வதற்குள், உருத் தெரியாமல் மாறிவிட்டன.

தான் அனுப்பிய புத்தர் சிலைக்கு சப்பானிய அரசன் கோவில் கட்டினான் என்பதை அறிந்த கொரியா மன்னன் அக்கோயிலில்

208261

வழிபாடு நடத்தப் பல புத்த பிட்சுக்களை அனுப்பிவைத்தான். புத்தர் கொள்கைகளைச் சப்பானிய மக்களுக்கு விளக்கிக் கூறவும் ஏற்பாடு செய்தான். அன்று முதல் சப்பானில் புத்தமதம் தொடங்க ஆரம்பித்துவிட்டது. அதன்பயனாக இன்று அந்நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் புத்தர் கோயில்கள் இருக்கின்றன; சப்பானியர் சமயமாகிய சிண்டோ மறையும் அளவிற்குப் புத்த சமயம் பரவிவிட்டது.

இன்று சப்பானிய மக்கள் சிண்டோ கொள்கைகள், கன்ப்யூசியசின் கொள்கைகள், புத்தரின் கொள்கைகள் மூன்றிலும் நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர்.

சிண்டோ கொள்கையின் மூலம் இயற்கையை விரும்பி அதில் இன்பம் பெறும் வழியைத் தெரிந்துகொண்டனர். இயற்கைத் தெய்வத்திற்கு மலை உச்சிகளில் கோயில் எடுத்தனர். வேனிற்காலத்தில் அழகான ஆடைகளை அணிந்துகொண்டு நறுமண மலர்களைக் கொண்டு அலங்கரித்து விழாக்கள் நடத்துகின்றனர். மலர்களை வீடுகளில் அலங்காரமாக வைப்பதற்கும் இயற்கைச் சித்திரங்கள் வரைவதற்கும் சிறுவர் சிறுமிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வீட்டு அலங்காரத்தை ஒரு கலையாகவே அவர்கள் கருதுகின்றனர்.

புத்தசமயத்தின் மூலம் அவர்கள் கோயில்களை எப்படி அலங்காரம் செய்வது, சிற்பங்களை எப்படிச் செய்வது, புத்தர் உருவங்களை எவ்வாறு அழகுபடுத்துவது போன்ற கலைகளில் மிகவும் தேர்ச்சி பெற்றனர்.

கன்ப்யூசியசின் கொள்கைகள் மூலம் சப்பானியர் கல்வியின் சிறப்பையும், அறிவின் ஆற்றலையும், ஒழுக்கத்தின் மாண்பையும் கற்றுக்கொண்டனர்.

தங்கள் நாட்டில் தோன்றிய சமயம் என்ற காரணத்தால் சிண்டோ கொள்கைகள் சப்பானியர் மனதில் வேரூன்றி இருந்தாலும், புத்தர் கொள்கையைப் பின்பற்றுபவர்களே சப்பானில் அதிகமாக இருக்கின்றனர். ஆனால் கன்ப்யூசியசின் கொள்கைகளே அவர்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

[வளரும்]

பொங்கல் வாழ்த்து

(கி. பழநியப்பன்)

உலகம் நாளும் உவந்திட அமைதி
நிலவுக எங்கும்; நிறைநலம் வளர்க;
அன்பும் பண்பும் அறமும் ஆட்சியில்
நன்றே ஓங்குக; நற்றமிழ் மங்கலப்
பொங்கல் இனிதே பொங்குக; நீவிர்
தங்கும் திருவொடு தழைக்க
வேண்டுதும் இறைவனை வேண்டுதும் யாமே!

சங்கச் செய்தி

மதுரை 19—1—59

மதுரைத் தமிழிசைக் கழகம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இசைப்பகுதியாகிய தமிழிசைக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மார்ச்சுத் திங்கள் முதல் வாரத்தில் தமிழிசைக் கழகத் தொடக்க விழா நடத்துவது என்றும், 100க்கு 80க்குக் குறையாது துவக்க முடிவு பாடல்கள் உள்படத் தமிழ்ப்பாடல்களே பாடும் இசைவாணர்களையே கழக இசை அரங்குகளுக்கு அழைப்பது என்றும் முடிவு செய்யப் பட்டது.

கீழ்க் கண்டவர்களைக்கொண்ட ஆட்சிக்குழு ஒன்று அமைக் கப்பட்டுள்ளது.

தலைவர்:		திரு. லெ. நாராயணன் செட்டியார்
துணைத்தலைவர்கள்:	,,	அ. இராமநாதபிள்ளை
	,,	P. அரங்கசாமி நாயுடு
	,,	அ. சிதம்பர முதலியார்
செயலாளர்கள்:	,,	வீ. சண்முகசுந்தரம்
	,,	கி. பழநியப்பன்
துணைச்செயலர்கள்:	,,	கண. சிற்சபேசன்
	,,	கு. மா. திருநாவுக்கரசு
பொருளாளர்:	,,	வ. அழகப்பன்

மேலும் 45 பெயர்களைக்கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கி. பழநியப்பன்
செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நூல்கள் விற்றுகிடைப்பம்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்திய சார சங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானுயிர் தக்கட்டளை	—	0	3	0
32.	மதிஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	8	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்சனி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை அணா 8 இதுவரை 53 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா விதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழ்வேள் திரு பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.

REGISTRAR OF BOOKS
25 MAR 1959
MADRAS

செந்தமிழ்

விளம்பி
மாசி
1959
FEBRUARY

தொகுதி-ருச
பகுதி - ௰க

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

Vol. 54
Nos. 11

உ

உள்ளுறை

1. நற்றிணை அரசப்புலவர்கள்—இராமையாபிள்ளை 323
2. நல்லுயிர் நீத்தம்மா—வித்துவான் மு. இராமகிருட்டினன் 330
3. அறிவியலுக்கு அப்பால்?— 332
பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் M. A., M. Litt.
4. வடமொழியும் தென்மொழியும் 341
பேராசிரியர் அ. கி. பரந்தாமனார். எம். ஏ.,
5. உலகச்சமயங்கள் — (கி. பழனியப்பன், மதுரை) 347

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி., இராசன்.
B. A, (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T. Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர் தியாகராசர் கல்லூரி, மதுரை.
4. திரு. பேராசிரியர். பி. சேதுமுத்து. M. A., B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L.. வழக்குரைஞர். மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர்.
மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழனியப்பன்,
தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்-மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்,
தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருச	விளம்பி—மாசி	பகுதி ௧௧
Vol. 54	1959—February	No. 11

நற்றிணை அரசப்புலவர்கள்

(வித்துவான். நா. இராமய்யாபிள்ளை B. O. L., மதுரை.)

(306-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூவின் அன்ன புதுநலம் தலைவி மாட்டுத் தோன்றியிருக்கும் இளமைச்செவ்வி, அது தலைவனால் உண்ணப்பட்டது. அதைத் தலைவன் நுகர்ந்தான் என்பது குறிப்பு. புதுநலத்தை உண்டவர் செருக்குற்றுத்திரிதல் உண்டு. எனவே தான் "மூரிஎக்கர்" என்று முன்னும் சுட்டப்பட்டது. முன்னதற்குப்பின்னது விளக்கம். இது தலைவன் நிலை.

தலைவி நேர்புடை நெஞ்சத்தோடிருந்தும் தலைவன் தீமையால் வருந்தியிருக்கவேண்டியிருக்கிறது. ஒருவர் நேர்மையாளர் எனினும் பிறர் தீமையால் வருந்தவேண்டிவரும். அதுபோலத் தலைவி மாட்டுத்தவறு ஒன்றுமில்லை எனினும் தலைவன் தீமையால் வருந்தவேண்டியுள்ளது என்பது தெளிவாகிறது. "நேர்புடை நெஞ்சம் தாங்கத்தாங்கி" என்றவரியைக் காண்க. மேலும் மாசற்ற கற்புடைய மடவோள் ஒருத்தியின் குழந்தையைப் பேய் ஒன்று வாங்கிக்கொண்டு ஓடிவிட்டபோது அவள் வருந்துவது போலத் தலைவி வருந்துவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஈண்டுக்குழவி என்பது புதுநலம். அது தலைவியிடமிருந்து வாங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது, பேய் என்பது தலைவன், தலைவியின் குழந்தையாகிய புதுநலத்தைக் கவர்ந்துபோனான் என்பது

[library stamp]

கருத்து. குழவிக்கும் தாய்க்கும் குருதித்தொடர்புஉண்டு. உடலோடு ஒன்றியிருந்து வேறுபடுவது குழவியும் தாயும், ஒன்றை ஒன்று பிரிந்தபின் பாசம் தோன்றும். அதுபோலத் தலைவிக்கும் அவள்புதுநலத்திற்கும் குருதித்தொடர்புஉண்டு. குழவியும் தாயும் போல அது உடலில் தோன்றியதுதான், பிரிந்தபோது பாசம். ஏற்படுத்துவதுதான். பேய் குழந்தையை உண்ணும், தலைவனும் தலைவியின் நலத்தை உண்டுவிட்டான் என்பது குறிப்பு. புது நலம் போனதால் நாணமும் போய்விட்டது, நாணம் பெண்களிடத்தில் தோன்றி வளர்ந்த குணம். எனவேதான் "சேணும் எம்மொடு வந்த நாண்" எனப்பட்டது. இது தலைவிநிலை. ஊர் என்பது ஆகுபெயரால் ஊர்மக்களைக் குறிக்கும். அவர்கள் அலர் தூற்றுவர் என்ற கருத்தில் 'அலர்க' எனப்பட்டது. இது ஊரின் நிலை.

இவ்வாறு மூன்று நிலைகளையும் மிகவும் அழகாக இலக்கியச் சுவையோடு எடுத்துரைத்த அறிவுடை நம்பியை நாம் எங்ஙனம் பாராட்டுவது! நுகர்ந்து நுகர்ந்து நாம் இன்புறுவதே நம்பிக்குச் செய்யும் பாராட்டாகும். முதல் உவமை துகில் நுடக்கம்போலத் தலைவி இருந்தாள் என்பது. இரண்டாவது உவமை கற்பின் மடவோள் குழவியைப் பேய் வாங்கிப்போனது போலத் தலைவியின் புது நலத்தைத் தலைவன் கொண்டுபோனான் என்பது.

ஊதைக்காற்று மணலைத் தூற்றுவதுபோல ஊரார் அலர் தூற்றுவர் என்றும், மடவோள் குழவியைப்பேய் வாங்கியது போலத் தலைவியின் புதுநலத்தைத் தலைவன் வாங்கினான் என்றும் துகில் நுடக்கம் போலத் தலைவி மனம் நுடங்கிக் கிடக்கிறாள் என்றும், எக்கர்மணல் காற்றால் தூற்றப்பட்டுக் குறைவது போலத் தலைவன் புகழ் குறையும் என்றும் கூறி விரைவில் வரைந்து கொள்வதே நலம் எனக் குறிப்பித்ததாம்,

இனி, பெருவழுதி என்ற அரசப்புலவர் கூறும் செய்தியை நோக்குவோம். களவுக் காலத்துத் தலைவியோடு மகிழ்ந்திருந்த தலைவன் திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காகப் பொருள் தேடப் போயிருந்தான். இரண்டு மாத அளவில் அவன் திரும்பி

வந்துவிடுவான். எனினும் தலைவியால் அந்த இடைக்காலம் தாங்கமுடியவில்லை. தன் வருத்தத்தை ஆற்றுவிக்கும் தோழியை நோக்கித் தலைவி சொல்லத் தொடங்கினாள்.

"தோழி! குட்டையான குராமரத்தின் அரும்பு வண்டுகளால் மலர்வதால் நறு நாற்றம் காற்றோடு கலந்துவர, அது மனதிற்கும், அழகாக நலம் காணப் பெறுவதால், அது கண்ணிற்கும் இனிமையாக இருக்கும் காலத்தில் ஒளி பொருந்திய வளையல்களை நெகிழ்த்தோராகிய காதலர் சென்றிருக்கும் நாட்டிற்கு என் நெஞ்சமும் சென்றது. காதலர் எடுத்துக்கொண்ட வினையை முடித்துத் திரும்பி வரலாமென்றபோது என் நெஞ்சமும் வரலாம் என்று கருதி அவரோடு இருக்கிறதோ? அவர் கவனியாது விட, திரும்பிவந்து என்னைப்பார்த்து, நான் தொல்நலம் இழந்து மெலிந்து இருப்பதால் அடையாளம் தெரியாமல், "இவள் ஏதிலாட்டி" (அயலாள்) என்று நினைத்து வருந்திச் சென்றுவிட்டதோ? யாதும் அறியேன்" என்று கூறினாள். (நற் 56)

இங்கே, "நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
... ... ஒட்டிய
உறுப்புடையதுபோல் உணர்வுடையது போல்
மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடுபுணர்த்தும்
சொல்லாமரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யாமரபின் தொழில்படுத்து அடக்கிச்
— தொல்-பொருளி-2.

சொல்லிய திறன்கண்டு மகிழ்க. இப்பாட்டு எவ்வளவு இனிமையாகவுள்ளது என்பதை மீண்டும் மீண்டும் பாடி மகிழ்ந்துநுகர்க.

பொருள்தேடிக்கொண்டு தலைவன் வந்தான். தோழி சந்தித்தாள். சொன்னாள்.

"ஓங்குமலை நாடனே! உன் உண்மை என்ன ஆயிற்று! மூங்கில் செறிந்த மலைப்பாதையில் முன் நீ வந்து இவள் தோள் சேர்ந்து மகிழ்ந்தபின்பு பொருள் தேடிப் போனாய். இவள் நெற்றி வாசனை யோடிருந்ததால் வண்டுகள் பல வந்து மொய்த்தன. கண்ட அன்னை, "பண்டும் இப்படியா இருந்தது என்று சினந்து

வினவினள். அதற்குத் தலைவி ஒன்றும் சொல்ல முடியாமல் அல்லாந்து என் முகம் நோக்கினாள். நான் 'தாய் என்ன உணர்ந்து என்ன செய்வாளோ' என்று அஞ்சினேன். இருந்தாலும், 'அன்னாய்! சந்தனக்கட்டையை அடுப்பிலிட்டேன். அதிலிருந்த வண்டுகள் பறந்துவந்து தலைவி நெற்றில் உட்கார்ந்தன' என்று சந்தனக்கட்டையைக் காட்டிச் சொன்னேன். இவ்வாறு பல இடையூறுகளைக் கடந்து நாங்கள் உனக்காக வாழ்கிறோம்'' என்றாள் தோழி. (நற். 55)

தான், தலைவி, தாய் மூவரும் பட்ட துன்பத்தையும் நிலையையும் எடுத்துக்காட்டும் அழகும் தலைவனுக்கு அறிவிக்கும் அழகும் கண்டு இன்புறத்தக்கன.

தலைவன் சான்றோரை அழைத்துத் திருமணம் செய்துவைக்கும்படிக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தோழியிடம் சொன்னான். தோழி நம்பினாள். தலைவன் பிரிந்து சென்றான். தோழி தலைவியிடம் சென்றாள். அப்போது தலைவி,

''தோழி! நோய் என்னை அலைத்துக் கலக்குகிறது. என் வலிமையெல்லாம் அழிந்து போகிறது. இந்நேரத்தில் என் காதலர் வந்து ஆறுதல் கூறித் தேற்றுதல் வேண்டும். அது ஆணாகப் பிறந்தவனுக்குப் பொருந்தும். ஆனால் அவர் வரவில்லை. கைத்திறமையுடைய கம்மியன் அழகுபெறக் கழுவாத முத்துப்போல நான் இருக்கிறேன். கொத்தான மலர்களைக்கொண்ட புன்னை மரத்தையும் புலால் நாற்றமடிக்கும் கடல் துறையையும் கொண்ட சேர்ப்பனை என் காதலனுடைய அழகிய மார்பையுடைய ஆசைப்பட்டு நான் மிகவும் நுண்ணிதாக நோயைத் தாங்கி வருந்துகிறேன். நான் பெண் தன்மையோடு இருக்கிறேன். இதை அறியாத என் காதலன் என்ன மகன்?'' என்று சொல்லி வருந்தினாள். (நற். 94)

இப்பாடலை இயற்றியவர் இளந்திரையனார். தலைவி தனக்கு மண்ணாமுத்தை உவமை கூறினாள் எனக் காட்டுவது நல்ல உவமை. தன் ஆசையை அவர் அறியவில்லை, ஆணாகப் பிறந்திருந்தும் எனத் தலைவி காட்டுவதாகக் காட்டுகிறார். நீரில் புலவு

வீச, புன்னை மலர்ந்து நறு நாற்றமாக்கும் துறைவன் என்பது தலைவன் பொருந்தாக்குணம். தன் பொருந்தும் குணத்தால் மேன்மையடைகிறது என்றாள் தலைவி எனக்காட்டுகிறார் ஆசிரியர். “காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்'' என்பதிலிருந்து காமம் செப்பல் பெண்மகற்கு அமையாது என்பதைப் பெற வைத்தாள் தலைவி என்கிறார் மீண்டும்.

இனி, செம்பியனார் என்பார் கூற்றைக் காண்போம். தலைவிக்குக் கோபம் கைமிக்கது. கிளியை விளித்துத் தூது அனுப்புகிறாள்.

''சிவந்த வாயையுடைய பசியகிளியே! விளைந்த தினைக்கதிர்களைக் குறைத்தாய், நீ அஞ்சாதே. வேண்டிய மட்டும் உண். உன் குறை முடித்தபிறகு என் குறையை முடிக்கவேண்டும். அது செய்யும்படி உன்னைக் கைதொழுது இரப்பேன். அக்குறை என்ன என்று கேட்கிறாயா? கேள் சொல்லுகிறேன். பல பழங்களையுடைய பலாமரம் நிரம்பிய மலைநாட்டு என் காதலரிடம் சென்று என் துயரத்தை எடுத்துரை. அதுவும் இதற்கென்று நீ செல்லவேண்டாம். அப்பக்கத்தில் உனது உறவினரைப் பார்க்கப் போகும்போது இதைத் தெரிவி. என்ன தெரிவிப்பாய்? கானக் குறவர் மடமகள் தினைப்புனம் காவல்செய்கிறாள் என்று தெரிவித்துவிடு. அவர் என்னை நினைத்து வருவார். உனக்குப் புண்ணியம் உண்டு'' என்று கிளியினிடம் இரந்தாள் தலைவி. (நற். 102)

கிளியைத் தூது அனுப்பும் வாயிலாகத் தலைவியின் காமமிக்க கழிபடர் கிளவியை இப்புலவர் பெருமான் வடித்து நமக்குத் தருகிறார். 'செவ்வாய்ப்பைங்கிளி' என்ற தொடர் அமைப்பில் சிவந்தவாய் என்ற பொருளோடு செம்மைவாய் என்ற பொருளும் கொள்ளக் கிடப்பது காண்க. செம்மையாகிய வாயால் காதலன்-காதலி மனத்தைச் செம்மைசெய்யலாம் என்ற பொருளும் தொனிப்பது காண்க. பைங்கிளி என்பது கண்ணுக்குப் பசுமையும் செம்மை வாயால் மனதுக்கு இனிமையும் தர வல்லதாகின்றது. ''நான் கையை உயர்த்துவது உன்னைத் தொழுவதற்கேதவிர உன்னை விரட்டுவதற்கன்று. நீ அஞ்சவேண்டாம்''

என்பது தலைவியின் உள்ளக்கிடக்கை. அவர் மலை பலாப்பழம் விளைந்து உலகமக்களுக்குக் கொடுக்கும். ஆனால் அவர் அவருடைய காதலிக்கு அருள்செய்து அளிக்கவில்லை என்பது குறிப்பு.

தலைவன் இரவுக்குறி வந்தொழுகினான். ஒருநாள் தோழி சந்தித்துத் தலைவனிடம் சொன்னாள்.

"தலைவ! முள்ளம்பன்றி தினைப்புனத்தை நோக்கிவந்து இயந்திரத்துவாரத்தே நுழையும்போது பல்லி அடித்தது. அது கேட்டு நல்ல சகுனமில்லை என்று நினைத்து மெல்லமெல்லப் பின்னே போய் தன் இருப்பிடம் அடையும்படியான வளப்பமுள்ள நாடனே! கேள். எம் தந்தையின் அகன்ற பாதுகாப்புள்ள வீட்டில் காவலரை ஏமாற்றி இரவில் நீ வருதல் எமக்குத் துன்பமாய் இருக்கிறது. அது மிகவும் கொடியது. நீ வருவாய் என்று எம் கண் தூங்காமல் இருக்கின்றன. அன்புடைய எம் நெஞ்சம் எதிர்பார்த்திருக்கிறது. எம் கண்ணும் நெஞ்சும் கொடியன என்று தலைவனைக் கொடியன் என்று சொல்லாமல் தம் உறுப்புக்களைக் கொடியன என்று கூறித் தம் உள்ளக்கருத்தையும் அச்சத்தையும் தோழி குறிப்பித்தாள். (நற் 98)

இப்பாட்டை இயற்றிய உக்கிரப்பெருவழுதி குறிஞ்சித்திணை வருணனையை அழகொழுகப் பாடிப்போந்தார் எனலாம். பாட்டு வரிகள்:

எய்ம்முள் அன்ன பருஉமயிர் எருத்தின்
செய்ம்ம் மேவல் சிறுகட் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில், தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லிப் பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்அளைப் பள்ளி வதியும் நாடன்!

என்பதே. "உன்நாட்டு விலங்கும் தனக்கு வரும் ஏதத்தை எண்ணிப் பிழைக்க நீ மட்டும் எண்ணாது எம்மனை துஞ்சாக் காவலர் இருக்க வருகின்றாய்" என்கிறாள் தோழி. "உனக்கு வரும் ஏதத்திற்கு நீ வருந்தவேண்டியதிருக்க எம் கண்ணும்

நெஞ்சும் வருந்துகின்றன. எனவே நீ எமக்கு எவ்வளவு இன்றியமையாதவன் என்பதை யாம் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை" என்பதும் தோழியது குறிப்பு.

இரவுக்குறிவந்து தலைவன் சிறைப்புறமாக விருந்தான். தலைவியும் தோழியும் பேசிக்கொண்டனர். தோழி சொன்னாள்.

"பெரிய உப்பங்கழியை அலை மோதுகிறது. மணலைக் கொண்டுவந்து கொட்டுகிறது. அங்கே வலிய அரும்பின்கொடி வளர்ந்திருக்கிறது. அது பூத்த மலரைப் பெண்கள் கொய்து தமது கூந்தலில் வைத்துக்கொள்கின்றனர். அவ்வாறாய கடற்கரைத் துறைவன் நமது காதலன். அவன் நட்பு நம்மோடு பிணிப்பில்லாதபோதும் நெருங்கிய நட்பு உண்டு என்று கொண்டு 'அவன் யார்' என்று அறமில்லாத அன்னை வினவுகிறாள். யான் உன்னை அறிவேன். பருத்த அடி மரத்தையுடைய புன்னைமரச் சேரியில் அவன் தேர் மணிக்குரல் இரவில் வருதலும் உண்டு. அது நமக்கு இன்னாது. வரைந்துகொள்வானானால் நல்லது" (நற் 145)

இப்பாட்டைப் பாடியவன் நம்பிகுட்டுவன். தலைவன் நாட்டு மணல் ஈரமானது. ஆனால் தலைவன் மனம் ஈரமில்லாதது. அரும்பின் கொடியில் மலர்ந்த மலரை மகளிர் அணிவர். அவன் நாட்டு அஃறிணைப்பொருள்கள் மகளிர்க்கு உதவுகின்றன. ஆனால் அவன் அவனை விரும்பிய பெண்ணிற்கு உதவி செய்யவில்லை. அவன் அழகன். ஆனால் மன அழகு இல்லாதவன். நாம் அவனை விரும்புகிறோம். ஆனால் அவன் நம்மை விரும்பவில்லை" என்ற குறிப்புக்கள் பாட்டில் இருக்கின்றன.

(தொடரும்)

நல்லுயிர் நீத்ததம்மா

(வித்துவான். மு. இராமகிருட்டினன், B. A., B. T.,

['ஆலிவர் கோல்ட்ஸ்மித்' என்னும் ஆங்கிலச் சான்றோர் இயற்றிய 'Elegy on the death of a mad dog' என்னும் செய்யுளைத் தழுவி யாக்கப்பெற்றது. அச்செய்யுள் 1959-ஆம் ஆண்டுப் பள்ளியிறுதித் தேர்வுக்குரிய ஆங்கிலப் பாடப்பகுதியில் வந்துள்ளது.

அன்பும் அருளும் ஒருங்கே அமையப்பெற்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாய் அவரிடத்துப் பேரன்பு பூண்டு ஒழுகிவந்தது. ஒருநாள் திடீரென்று அந்நாய் அவரைக் கடித்துவிட்டது. கண்டவரெல்லாம் அந்நாயைக் கடிந்துரைத்தனர்; பெரியார் இறந்து விடுவாரே என்று ஏக்கமுற்றனர். எல்லாரும் வியக்கத்தக்கவண்ணமாக ஒன்று நிகழ்ந்தது. பெரியார் உயிர் பிழைத்தார்; நாயோ தனது நல்லுயிரை நீத்தது. இந்நிகழ்ச்சியைக் குறித்தே ஆலிவர் கோல்ட்ஸ்மித் தனது இரங்கற் பாவைப் பாடினார். நம் புலவர்பெருமக்கள் மக்களில் சிறந்தோர் இறந்துபடின் கையறுநிலை பாடுவர். ஆங்கிலப்புலவர் சிற்றுயிர்க்கும் கையற்று இரங்கியது கண்டுக்குறிப்பிடத்தக்கது]

(கலிவிருத்தம்)

1. தெள்ளிய மொழியினில் திருந்துற வழுதினை
ஒள்ளிய ரனைவரும் உளங்கொள மடுப்பரே
வெள்ளிய வுரைஞரா வியத்தகா வுரைதமை
கொள்ளலர் புலனுணர் கூர்த்தநுண் மதியினர்

2 எத்தரும் புகழ்மிகும் இலிங்டனென் னகர்தனில்
சுத்துவஞ் சிதையுடா நிறைவினை வழுத்திடும்
பத்தருள் பெருகுமோர் புகழவர் திகழ்ந்தனர்
நாத்தழும் பேறினர் நவின்றவர் நலம்பிறர்.

3. அருண்மிகு முளத்தினர் அயலவர் தமக்கெலாம்
பொருண்மிகு முரையொடு புரையறத் தெருட்டுவார்
இருண்மிகு வறுமையின் னிடுக்கணுற் றுடையிலார்
வருமவர் தமையுடீஇ வள்ளலும் உடுப்பரால்

4. அன்னதோர் சிறப்பினர் அருள்பொழி விழியினர்
பொன்னடி பொருந்தியே பொழுதெலாம் தொடர்ந்திடும்
நன்னய நாய்தனைக் கண்டவர் கழறுவார்
என்னையிச் சிற்றுயிர்க் கெத்துணை நட்பென.

(சிர்வகைக் கொச்சகம்)

5. இல்லாத வுலகத்து நெறியினும் நிலையுண்டோ
பொல்லாத காலத்துப் பொன்றுமே உணர்வுந்தான்
கல்லாருங் கற்றாரும் கலங்குறக் கடித்ததுவே
எல்லார்க்கு நல்லாரை என்கொலோ வஞ்ஞமலி[1]

6. தொண்டரவர் மேனியினைத் துயருறாஉம் புண்கொடுத்தே
கண்டவர்கள் எல்லாரும் கரைந்தனர் கையற்றே
கொண்டதிந்த நாய்வெறிதான் கூற்றுரு வந்ததென்பார்
பண்டுடைய பண்பிழந்து பழிக்கிட மானதென்பார்.

கட்டளைக் கொச்சகம்

7. வெள்ளத் தனையவருள் வித்தக ராம்சிறிஸ்த்
துள்ளக்கண் வாய்ந்தோ ருருகி யுரைக்கலுற்றார்
எள்ளற் கரியா ரிறப்பதுந் திண்ணமென்றார்
தள்ளற் கரியவிதி [2] தட்போ ரெவரென்றார்

8. மற்றுஞ்சின் ஞெட்கழிய மாண்புயர் சான்றோரும்
உற்றபுண் ணாறி வுடனல மெய்தினரே
சிற்றுயிர்தான் செய்ந்நன்றி தேர்ந்து வியப்பெய்த
நற்றுணை யின்றநாய் நல்லுயிர் நீத்ததம்மா!

---

1. ஞமலி—நாய் 2. தட்போர்—தள்ளுவோர்.

அறிவியலுக்கு அப்பால்?

[பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் M. A. M. Litt.]

மனிதன் காற்றையும் கடலையும் கட்டியாண்டு, வேற்றுக் கோளங்களுக்குக்கூடத் தாவிச்செல்லவும், பரந்த உலகத்தை ஒரு நொடியில் அழிக்கவும், அண்டகோளத்தை அளக்கவும் வல்லனாயினன் என்று கர்வம் கொள்ளுவனாயின் அவன் தவறு செய்தவனாவான். உண்மையில் மனிதனை என்றென்றும் வாழ வைப்பன இப்புற வெற்றிகளல்ல. இவற்றின் எல்லையைக் கடந்து நிற்கும் கடவுள் உணர்வோடு, பண்பட்ட ஒழுக்கநெறியில் மனவுணர்வினைத் தன்வழி அடக்கி 'மனிதன் வாழ்வாங்கு வாழப் பழகுவானேயாயின் அதுவே அவன் பெருமைகொள்ள வழி வகுப்பதாகும்' என்ற பொருள்பட, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆர்க்காடு இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தியாகராசர் கல்லூரிக் கழக ஆண்டுவிழாவில் மாணவர்களுக்கு (4-3-59ல்) அறிவுரை வழங்கினார்கள். அறிவியல் துறையில் உலகமுழுதும் போற்றக்கூடிய ஓரறிஞர் தன் அறிவியலுக்கு ஏற்றம் தராது, அதற்கு அப்பாற்பட்ட ஆண்டவனுக்கும் அவனை அன்புவழியால் காணும் அறவாழ்வுக்கும் ஏற்றம் தந்தார் எனின், அக்கருத்து எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்றல்லவா? அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்—எல்லாச் சிறப்புகளும் அறிவியல் உலகுக்கே என்று பாராட்டு வழங்கும் காலத்தில்—அத்துறையில் உலகம் போற்றும் ஒரு வல்லவர் அவ்வறிவியலுக்கு மேலுள்ள உள உணர்வுவழிச் செல்லும் அறநெறியை வற்புறுத்துவாரானால், அதில் உலகம் உய்ய வழி உண்டு என்ற ஒரு நல்விளக்கு ஒளி விடுகிறதன்றோ! அறிவியல் வழி அணுகுண்டும் பிறவும் உலகை விழுங்கப் பார்க்கும் இந்நாளில், அவற்றின் எல்லை கடந்த, ஒழுக்கமொடு புணர்ந்த மனிதப் பண்பாடே உலகை வாழ்விக்க வல்லது எனக் காட்டி எங்கோ ஓடும் உலகை அன்பு நெறியில் திருத்தும் நல்ல

வர் நம்மிடை வாழ்வதால் நாடும் உலகமும் அழியாது – அல்லலுறாது. பண்பாட்டில் வாழும் என்ற உணர்வு நமக்கு உண்டாவது இயல்புதானே!

ஆம்! இத்தகைய உண்மையை நம் நாட்டில் மிகப் பழங் காலந் தொட்டு அறிஞர்கள் அவ்வப்போது காலமும் வாய்ப்பும் வருங்காலத்திலெல்லாம் நமக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறார்கள். பஞ்சபூதச் சேக்கையால் தோன்றும் உலகையும் இவ்வுலகைச் சுற்றிய பிற பொருள்களையும் கண்டு கண்டு விம்மிதம் அடையும் மனிதனை அழைத்து, அப்பா, இந்த உலகத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் அவற்றிற்கு அப்பால் உள்ளவைகளையும் தோற்றுவித்து, காத்துத் தானும் அவற்றின் உள்ளிடைப் பட்டும் படாமலும் இருந்து, உலகை அறவழியில் செலுத்த எண்ணும் ஓர் ஆற்றல் - சக்தி - கடவுள் இருக்கின்றது என்ற உணர்வோடு, எல்லாவற்றையும் ஒத்து நோக்கி மனித உணர்வோடு வாழ்' என்று அறிவுறுத்துகின்றனர், இந்த அறிவு நிலையே பிற்காலத்தில் சமயங்கள் என்ற பெயரால் நாட்டில் வாழ்கின்றன. காட்டும் முறைக்கும் வகைக்கும் ஏற்பச் சமயங்கள் உலகில் பலவாக ஓங்கின. எனினும் எல்லாச் சமய முடிபுகளும் கடைசியில் ஒன்றாகவே அமையும் என்பதை அறிவோர் உணர்வர்.

விஞ்ஞான விளைவுகளை ஆய்வுக்களத்தில் உட்கார்ந்து கொண்டு ஆராய்கின்றனர் இன்றைய ஆராய்ச்சியாளர்கள். யார் முதலில் சந்திரனுக்குச் செல்வது என்பதில் போட்டி மிக அதிகமாக இந்நாளில் இருப்பதைக் காண்கிறோம். இப்படி வளர்கின்ற எறிவியற்கலை மனிதனை எங்கு அழைத்துச் செல்லும் என்று யாரே கூறவல்லார்? இந்த ஆராய்ச்சிக்கு இடையில் மனிதனுடைய அறிவு சற்று விரிவடைகிறது என்பது உண்மையே. எனினும் அவ்விரிவினால் பயன்பெற அவன் நினைப்பதற்குள், மாற்றுச் சூழ்ச்சிகள் அவன் உள்ளத்தில் குடிகொண்டு, அவன் அறிவை ஆக்கப் பணிக்கு ஈடுபடுத்துமுன் அழிவுக் கொடுமைக்கு ஈர்த்துச் செல்லுகின்றன. இதனாலேயே இன்றைய உலகம் நடுங்கிக் கொண்டிருக்கிறது.

அறிவியல் துறை மனித அறிவை வளர்க்கிறது என்ற உண்மையை மறைக்கமுடியாது. திருவள்ளுவனார் 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்று உவமையாக உலகம் பெறத்தக்க உயரிய ஓர் உண்மையை விளக்குகின்றார். எத்துணை ஒருவர் அறிய முயல்கின்றாரோ, அறியநினைத்து முன்னேறுகின்றாரோ- அத்துணை அளவு தான் அறியாத எல்லை விரிந்து கொண்டே போகின்றது என்பதை அவன் அறிவான். சேயிழை மாட்டு எல்லையற்றுப் பெருகும் காதலை விளக்க வந்த வள்ளுவர் இந்த உவமையைக் கூறினாலும் இது எல்லாவற்றிற்கும் பொருந்துவதேயாகும். சிறப்பாக இன்றைய விஞ்ஞானி இவ்வுண்மையை ஏற்றுக் கொள்வதன்றி வேறுவழி இல்லை.

உலகம் ஒன்றுதான் உள்ளது என்று எண்ணிய காலத்தில் அவன் அண்டகோள அளவை எண்ணிப் பார்க்கவில்லை. தான் இவ்வுலகத் தனித் தலைவன் என்ற தருக்கில் தலைநிமிர்ந்து வாழ்ந்தான். ஆனால் அறிவியல் வளர்ந்தபின் சிறுகச்சிறுக அவன் எண்ணமும் மாறிக்கொண்டே வந்தது. தன் வாழ்வு. தன் உலகம் என்று தருக்கிய அவன், பரந்த அண்டப் பரப்பில் இவ்வுலகம் ஒரு சிறு துளி என அறிந்தான். அதேபோன்று மிக விரிந்த கால எல்லையில் தன் வாழ்நாளோ—அன்றி இந்தப் பரந்த உலகத்தின் வாழ்நாளோ ஒரு கொடி என்று அறிந்துகொண்டான். அறிவியல் வளரவளர, அண்டகோளத்தின் எல்லை விரிய விரிய—மனிதன், விஞ்ஞானி—தான் அறியும் அண்டகோள எல்லையைக் காட்டிலும், காணாத எல்லை மிக மிக விரிவடைந்து கொண்டே செல்வதை அறிகிறான். இந்த நிலையில் அவன் திகைக்கிறான். ஆய்வுக் களத்தில் அல்லும் பகலும் அயராது உழைத்த உழைப்பு அவனை அண்டகோளத்தின் ஒரு சிறு எல்லைக்குத்தான் அழைத்துச்செல்ல உதவுகின்றது. எத்துணை உயர்ந்த தொலைநாடியைக் கொண்டு ஆராய்ந்தாலும் எல்லை விரிந்துகொண்டே போகின்றது. இன்று ஒளிகதிர் பரப்பும் சில விண்மீன்கள் தன் ஒளியை நிலத்துக்கு அனுப்ப பல்நூறு ஆண்டுகள் ஆகின்றன என்னும் அளவுக்கு அவன் ஆய்வுகளம் அவ

னுக்கு உணர்த்துகிறது. எனினும் அண்டமுகட்டு எல்லை அதற்கும் அப்பால் எங்கிருக்கிறதோ என்ற எண்ணம் உண்டாகும்போது அவ்விஞ்ஞானி மலைக்கத்தானே வேண்டும். ஆம்! அந்த ஆய்வின் எல்லைக்கோட்டுக்குள் அவன் கண்டன மிகச் சிலவே. இந்த உணர்ச்சிதான் கடவுள் உணர்ச்சிக்கு வித்தாகின்றது. இதை இன்றைய விஞ்ஞானிகளில் ஒருசிலரே ஆய்ந்து உணர்ந்தார்கள் என்றாலும், எல்லா அறிவியல் அறிஞர்களும் இனி இந்த முடிவுக்குத்தான் வரவேண்டும். கடவுள் இல்லை என்பாரும்—எல்லாச் சூழலும் மனித ஆற்றலுக்கு உட்பட்டது என்பாரும்—விஞ்ஞானமே கடவுள் என்பாரும் மனமாறும் காலம் வந்துவிட்டது. அவ்விஞ்ஞானியின் அறிவும், ஆய்வுகளமும், அதன் கருவிகளும் அவனை இன்றுமட்டுமல்லாமல் என்றுமே ஒரு எல்லைக்கோட்டில் நிறுத்துமேயன்றி முற்ற அறிய வழிகாட்டாது. எனவே மனிதன் குறையறிவுடையவனாகின்றான். எனவே நிறையறிவுடைய இறைவன் ஒருவன் உளன் என அவன் மனம் உணர்த்துகின்றது. இவ்வுண்மைகளையெல்லாம் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே நம் முன்னோர்கள்—பண்டைத் தமிழ்மக்கள் நன்கு அறிந்திருந்தனர். இந்தப் பரந்த உலகம் சூரியக் கதிரொளியில் மிதக்கும் பலகோடி அணுக் கூட்டங்களில் ஒரு அணுவே என்றார் மாணிக்கவாசகர். உலகம் உருண்டை என்பதையும், அவ்வுலகங்களின் எண்ணிக்கையும். அளவும், ஒளி ஒலிக் கூறுகளும் நூற்றொரு கோடியினும் மேற்பட்ட அளவற்றவை என்றும், அவ்வளவு கடப்பு. கூரையில் புகும் கதிர் ஒளியில் அகப்பட்டுத் தோன்றும் சிற்றணுக் கூட்டத்தினை ஒத்தது எனவும் காட்டுகின்றார்.

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாக"

என்பது திருவாசகம் திருவண்டப் பகுதி.

இவ்வாறு விஞ்ஞானக் கருத்துக்களைக் கூறிய மணிவாசகர் அதன்வழி இன்றைய அறிஞர் காணத் துடிக்கும் மெய்ஞ்ஞான நெறியையும் காட்டுகின்றார். இவ்வாறு பல்வேறு அண்டங்களைப் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் கடவுளேட. அனைத்தினுக்கும் அப்பால்நின்று இயக்குபவன்என்றஉண்மையை

"தீயின் வெம்மை செய்தோன், பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன், நிழல் திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன், வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்"

என எடுத்துக்காட்டி ஐம்பூத இயக்கத்தால் ஆகும் அனைத்தையும் விளக்கி. அவற்றுக்கு அப்பால் இருக்கும் ஆண்டவன் நிலையையும் செயலையும் விளக்குகிறார். இன்று விஞ்ஞானிகள் அந்த எல்லையையும் நிலையையும்தான் எண்ணிப்பார்க்கத் தொடங்குகிறார்கள். நிற்க.

பேரெல்லையாகிய விரிந்த அண்டகோள அமைப்பின் விளக்கம் இதுவாக சிற்றெல்லையாகிய அணுவின் அமைப்பைப் பற்றியும் காண்போம்! விரிந்த எல்லையில் உள்ள காரணத்தினால்தான் அண்டகோளத்தைக் காணமுடியவில்லை; மிகச்சிறிய அணுவின் நிலையை அறுதியிட்டுவிட்டோம் என எந்த விஞ்ஞானியாவது வீறுபேச முடியுமா என்பதையும் எண்ணிப்பாருங்கள். அதிலும் அவர்கள் வெற்றிகொள்ளவில்லையே சில ஆண்டுகளுக்கு முன் அணுவே மிகச்சிறியது எனவும் அதைப் பிரிக்கமுடியாது எனவும் எண்ணியும் பேசியும் எழுதியும் வந்த அதே விஞ்ஞான உலகம்தான் இன்று அதைப் பிரித்துப் பார்த்துவிட்டது. அது மட்டுமா! அம்மம்ம! அதன் பிரிவாற்றலால் இவ்வுலகையே அழிக்கக்கூடிய பெரு ஆயுதங்களையும், ஆக்கப் பொருள்களையும் உண்டாக்க முடியும் என்பதைச் செயலில் காட்டியும்விட்டது. அணுவின் நிலை அந்த அளவோடு முடியவில்லை. அறிய அறிய அண்டமுகட்டின் எல்லை எப்படி மேன்மேல் விரிந்து சென்று கொண்டே இருக்கிறதோ, அதுபோன்றே அணுவின் நிலையும் பகுத்துப் பகுத்து உணர உணர இன்னும் ஆழ்ந்து நுண்ணணுக்

களாக அமைந்து, விஞ்ஞானியின் அறிவு ஆராய்ச்சியின் எல்லையைக் கடக்கின்றது. ஆம்! இந்த இரு எல்லை நிலைகளிலேதான் அறிவு அடக்கி, ஆணவம் குன்றி, உயிர்நிலை உணரத் தொடங்கும் ஒழுக்கநெறி பற்றிய கடவுள் உணர்வு உண்டாகிறது. அதையே ஒரு பெருஞ் சமயத்தலைவர்,

'அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்' ஆண்டவன் இருகின்றான் எனக் காட்டினார். இப்படி இருபுறத்தும் விரிவடையும் அறிவியலுக்கப்பால் அமைந்த பெருநெறி பண்பட்ட ஒழுக்க நெறியால் ஓம்பப் பெறும் கடவுள் நெறியேயாகும் விண்ணையும் மண்ணையும் அணுவையும் அண்டத்தையும் அளக்கும் ஆற்றல் உடையவர்கள் உளப்பண்பாட்டினை அதே கருவி கொண்டு அளக்க இயலாது என்பதைப் பழங்காலத் தமிழ் நாட்டார் நன்கு அறிந்து இருந்தனர். இக்கட்டுரையின் முதலில் கண்டவாறு இந்த அறிவியல் வளர்ச்சிகளைக் காட்டிலும் 'தன்னைப் போல் பிறரை ஒத்து நோக்கும்' மனிதப் பண்பாட்டின் வளர்ச்சியே மேலானது என்பது அவர்களுடைய எண்ணம். விண்ணையும் மண்ணையும் அளப்பவர் மன நலத்தையும் பண்பாட்டையும் அறியமுடியாது எனப் பாடுகின்றார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார். தன் முதுகண்ணின் பெரு ஆய்வால் அவர்கண்ட உண்மையைச் சோழன் நலங்கிள்ளியின் பண்பாட்டின் மேல் சார்த்திக் கூறுகின்றார்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும், பரிப்பு சூழ்ந்த மண்டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலை இய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்தென் போரும் உளரே: அனைத்தும்
அறிவறிவாகச் செறிவினையாகிக்
களிறுகவுள் அடுத்த எறிகற்போல
–ஒளித்த துப்பினை"

(புறம் 30) என எடுத்துக்காட்டுகின்றார்.

இதில் சூரியனையும், அதன் செலவையும், அதனால் உண்டாக்கும் இலக்கத்தையும், அதைச் சூழ்ந்திருக்கின்ற மண்டிலங்களையும், காற்றின் தன்மையையும், ஒன்றிலும் பற்றாது வறிதாக உயர்ந்து நிற்கும் வானையும் கூறி அவற்றின் நிலைகளையெல்லாம் அளக்கும் ஆற்றல்பெற்ற அறிவியல் தலைவர்களெல்லாம் ஆய்ந்தும் அறியமுடியாத பண்பாட்டால் உயர்ந்த உள்ளீட்டை (உளத்தன்மையை) உடையவன் நலங்கிள்ளி என்கின்றார் ஆசிரியர். ஆம்! மனிதனுடைய உளப் பண்பாட்டில் பெறும் வெற்றியே விஞ்ஞான வெற்றிகள் அனைத்தினும் மேம்பட்டது ஆகும். இந்த உண்மையை இன்றைய உலக நிலை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மனித இனம் வாழவேண்டும் எனப் பேசிக் கொண்டே, விஞ்ஞானத்தால் உலகை அழிக்கும் ஆய்வுக்களங்களை வளர்த்துக் கொண்டே போகும் வல்லரசுகளினால் தானே உலகில் அமைதிகாண முடியவில்லை. இன்று சந்திரனையும் எட்டிப் பிடிக்கும் தகுதிபெற்ற மனிதன், அண்டை வீட்டு மனிதன் தன்னைப் போல வாழ்வானானால் அவனைக் கண்டு பொறுமைப் படுவதோடு, அவனையும் அவன் வாழ்வையும் அழிக்கவன்றோ நினைக்கின்றான். இக்காட்சி வீட்டுக்கு வீடுமட்டுமன்றி நாட்டுக்கு நாடும் நாம் காணும் நிகழ்ச்சியாகவன்றோ விளக்குகின்றது. இந்த அவல நிலை விஞ்ஞான விளைவால் வந்தது தானே. அணுகுண்டும். நீர் வாயுக்குண்டும், பிறவும் விண்வழிச் சேர்க்கையும் மிக இருக்கின்ற காரணத்தாலன்றோ ஓரினம் மற்றோரினத்தை விழுங்கப் பார்க்கின்றது. இந்த விஞ்ஞான வளர்ச்சியால் மாறுபாட்டுணர்வும் பகை நோக்கும் வளர்ந்ததேயன்றி, பண்பாட்டு உணர்ச்சியும், அன்பு நோக்கும் உலகில் உருவாயினவா? இல்லையே! ஏன்? அதுதான் விஞ்ஞான வளர்ச்சியைப் புரிந்து கொள்ளாத வினை. விஞ்ஞானிகளாலே காணமுடியாத பண்பாடுதான் உலகை வாழவைக்கும் என்ற உண்மையை உணராமையால் வந்த கொடுமை. இன்றைக்கு அவ்வுண்மை ஒரு சில விஞ்ஞானிகள் உள்ளத்தில் உருவாகத் தோன்றியுள்ளது. இவ்வுண்மை உலக வாழ்வின் அடிப்படையாகக் கொள்ளப்பெறுமானால் அன்று உலகம் வாழும். உயிர்களும் நலம் பெறும்.

இவற்றையெல்லாம் எண்ணிய அறிஞர்கள் அன்று தமிழ் நாட்டில் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்கள் தாம் உணர்ந்த உண்மையை நன்கு உணர்த்தியுள்ளார்கள். எத்தனை அறிவாற்றல் சிறந்து நின்றாலும், விஞ்ஞானத்தின் எல்லையில் திகைக்கும் இன்றைய விஞ்ஞானி அந்த உண்மை உயர்வை ஓதி உணர்வானாயின் கட்டாயம் அவனும் அவன் விஞ்ஞானமும் வாழும். அன்றேல் அவன் உண்டாக்கிய விஞ்ஞானக் கோளாறு மாற்றானை மட்டுமின்றி, அவனையேகூட அழித்து உலகைச் சாம்பலாக்கிவிடும். இந்தப் போக்கினை நீக்க வழியில்லையா? ஏன் இல்லை? உண்டு. உணரக் கண்ணும் கருத்தும் தேவை.

விண்முட்டும் வரையில் தன் விரிவைப் பெருக்கிக்கொண்ட விஞ்ஞானி அடுத்தது என்ன என அறியாது அலமருகின்றான். அங்கேதான் நாம் முன்கண்ட கடவுள் உணர்ச்சி அரும்புகின்றது. அதைப் பழங்காலத்தில் பலர் காட்டியுள்ளனர். அவருள் சிறந்தவர் கீரந்தையார் எனும் பெரும்புலவர். அவர் தமது பரிபாடலில் உலகம் உண்டான வரலாற்றையெல்லாம் ஆராய்கின்றார். பஞ்சபூதத் தொடக்கமும், அவற்றின் சேக்கையும், மாற்றங்களும், பிற வேறுபாடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. மனித ஆய்வின் எல்லைக்கோட்டில் நின்று சிந்திக்கிறார் அவர். ஆம்! இத்தனை ஊழிகளை அடுக்கடுக்காகத் தோற்றி, அவற்றின் உள்ளுக்குள்ளாகவும் அப்பாலுக்கப்பாலாகவும் ஓர் பொருள் இருக்கவேண்டும் என உணர்த்துகிறது அவரது பண்பட்ட உள்ளம். அந்த உணர்வே கடவுள் உணர்வாகிறது. 'அனைத்தும் ஆக்கி அருளி அழிக்கும் ஆண்டவனே' என அவர் வாய் வாழ்த்துகிறது. இதோ அவர் பாட்டு:-

"தொன்முறை இயற்கையின் மதியொ......
....மரபிற்றாகப்
பசும்பொன் னுலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்

உந்து வளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத் தூழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி யீட்டம் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தபின் முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா
ஆழி முதல்வ நிற்பேணுதும் தொழுது."

(பரிபாடல் 2-ஆம் பாட்டு 1—19)

என்று கீரந்தையார் எல்லாவற்றையும் ஆராய்ந்து, அவற்றின் தோற்ற ஒடுக்கங்களையும், அவற்றுக்கிடையில் கழிந்த கணக்கில் காலஎல்லையையும் எண்ணி எண்ணி—இடையறாது கணக்கிட்டுக் கணக்கிட்டு கடைசியில் உணரா ஆழி முதல்வனை உணர்த்துகிறார். எனவே விஞ்ஞான எல்லையில் அறியமுடியாத உண்மைகளை உணர்த்துவது மெய்ஞ்ஞானமேமாகும். அம்மெய்ஞ்ஞானம் மக்கள் உள்ளத்தே அரும்ப வேண்டும்; அவர்தம் பண்பாட்டில் சிறக்கவேண்டும். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி வாழ்விடை அன்புசிறக்க ஆக்கப்பணி ஓங்க வேண்டும். ஆம்! மனிதன்—இன்றைய மனிதன்—விஞ்ஞான ஆய்வுகளத்தில் அல்லும் பகலும் அழிவுப் பணிக்குத் தொண்டாற்றும் இன்றைய மனிதன்—சற்று நின்று தன் உள்ளத்தைத் தொட்டுப்பார்த்து, நம் அறிவியலுக்கு அப்பால்—விஞ்ஞான விளைவுகளுக்கு அப்பால் என்ன இருக்கிறது என நினைப்பானாயின் அவன்முன்னர் அளந்தறியாப் பண்பட்ட மனித ஒழுக்கச் சிறப்பும், அவ்வொழுக்க நெறிவழி உலகை அன்புவழியால் ஓம்பும் கடவுள் நெறியும் காட்சிதரும். இவ்வுணர்வினை என்னைத் தொடங்கிய விஞ்ஞான உலகம் விரைந்து இத்திசையில் திரும்புமானால் நாம் வாழ்வோம்! நாடும் நானிலமும் வாழும்! அந்த நாள் விரைந்து வருவதாக!

வடமொழியும் தென்மொழியும்

[பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், M. A.,]

மொழியாவது மக்களது இயற்கை வேட்கையில் தோன்றி அவர்களுடைய அறிவுத் திறனுக்கு ஏற்பவும் நாகரிக முறைக்குத் தக்கவாறும் வளர்ந்து வருவதோர் மக்களாக்கப் பொருளாகும். இது எப்பொழுது எவ்வாறு உண்டாயிற்று என்பதும், மக்கள் எப்பொழுது பேசக் கற்றுக்கொண்டார்கள் என்பதும் திட்டவட்டமாகச் சொல்லமுடியாத புதிர்களாகவே இருந்து வருகின்றன. எப்படியோ இப்படியில் ஆயிரக்கணக்கான மொழிகள் தோன்றிச் செப்பமுற்றும் செப்பமுறாமலும் உலவுகின்றன. 1953-ல் உலகில் 2750 மொழிகள் இருந்தனவாகக் குறிப்பிடப்படுகின்றன. இந்தியாவில்மட்டும் இன்று 179 பெருமொழிகளும் 544 கிளை மொழிகளான சிறு மொழிகளும் இருப்பதாக மொழி நூலறிஞர் சுனிதுகுமார் சட்டர்ஜி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். 179 மொழிகள் எனப்படுவற்றுள்ளும் 116 மொழிகள் இந்திய நாட்டின் கிழக்குக் கோடியிலும் வடகிழக்கு எல்லையிலும் வாழும் மலைமக்கள் பேசும் திபத்து - சீனமொழி இனத்தைச் சார்ந்த மொழிகளாம். இலக்கிய வளமொழிகளாக இந்தியாவில் விளங்குபவை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, உருது, இந்தி, வங்காளம், ஒரியா, சிந்தி, பஞ்சாபி, காஷ்மீரி நேபாலி, அசாமி, சமஸ்கிருதம். இப்பதினாறு மொழிகளுள் தமிழ் முதலான பதினைந்து மொழிகளும் பேச்சு வழக்கில் உள்ளவை; சமஸ்கிருதம் மட்டும் பேச்சு வழக்கற்று ஏட்டு மொழியாக நாட்டில் இயங்குவது, சம்ஸ்கிருதம் வடநாட்டிலிருந்து தென்னகத்தில் புகுந்ததால் அதனைத் தொன்று தொட்டு வடமொழி என்று கூறலாயினர். தென்திசையில் வழங்கும் திராவிட மொழிகளுக்கு மூலமொழியாக, தாய்மொழியாக இருப்பதாலும், இனியமொழியாகத் தமிழ் மக்கள் தங்கள் மொழியைக் கருதுவதாலும், அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைத் தென்மொழி என்றனர். தென் என்னும் சொல்லுக்கு அழகு, இசை

என்னும் பொருள்கள் உண்டு. 'தென் உண்தேனின் தீஞ்சுவை' என்னும் இராமாயணப் பாடல் அடியில் காணப்படும் தென் என்னும் சொல் இசை எனும் பொருளில் வந்திருத்தல் காண்க.

தமிழ் நாட்டில் ஆரியர் கூட்டுறவு ஏற்பட்டு இன்றைக்கு ஏறக்குறைய 3000 ஆண்டுகளாகின்றன. ஆராய்ச்சிப் பேராசிரியரும் வடமொழி வல்லுநருமான R. G. பந்தர்க்கர் ஆரியர்கள் கி. மு. 7-ஆம் நூற்றாண்டில் தென்னகத்தில் நுழைந்து விட்டார்கள் என்றும், கி. மு. 350 க்குள் தஞ்சை மதுரை வரையில் பரவத் தமிழர்களோடு பழகிவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுப் பேராசிரியர் K. A. நீலகண்டசாஸ்திரியார் ஆரியர் தமிழக நுழைவு கி. மு. 1000 ல் தொடங்கிக் கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் முடிந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். சங்க இலக்கியங்களை ஒரு சிறிது கற்றாரும் ஆரியர் செல்வாக்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே தென் தமிழ்நாட்டில் இருந்ததை அறியாமலிருத்தல் முடியாது. கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கூறப்படும் தொல்காப்பியத்திலும் வடமொழியைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கிறோம். செய்யுளீட்ட மொழியாகக் கூறப்பட்டுள்ள இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் ஆகிய நான்கனுள் தொல்காப்பியர் வடசொல்லுக்குத் தனியிடம் வகுத்துவிட்டார். அவர் எச்சவியலில் சொற்களின் வகையைக் குறிக்குமிடத்து,

"இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்,

"வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என வடசொல் இன்னது என்று கூறியிருப்பதும் காண்கிறோம். வடசொற்கிளவியாவது வடசொற்கே உரிய எனப்படும் சிறப்பெழுத்தின் நீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம் என்றவாறு என்பது இதற்குச் சேனாவரையர் கூறிய உரையாகும்.

இவ்வாறு தண்டமிழ் நாட்டில் பன்னெடுங் காலமாக வடமொழி வழங்கி வந்ததால் நம் முன்னோர்கள் அதனைத் திசைச்சொல்லில் அடக்காமல் அதற்குத் தனியிடம் வகுத்துப் பெருமையளித்தார்கள். மேலும் வடமொழி இந்நாட்டில் சமயத்துறையில் இமயம் முதல் குமரி வரையில் பொதுமொழியாக வழங்கி வந்தமையால் அதனைத் தெய்வமொழி என்றும் கருதலானார்கள். சேனாவரையர் "வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலான்" என்று கூறியது, சமயத்துறையில் வடமொழி இந்திய நாடு முழுதும் சமயப் பொதுமொழியாக இடம்பெற்று வழங்கி வந்ததையே குறிப்பிடுவதாகக் கொள்ளுதல் வேண்டும். வடமொழி சமயப் பொதுமொழியாக இருந்ததாலும், உயர்ந்தமொழியாகத் தன்னகத்தே சிறந்த இலக்கிய இலக்கண நாடகங்களைக் கொண்டு சீரும் சிறப்பும் பெற்று விளங்கினமையாலும், தமிழ் நாட்டில் ஏட்டு மொழியாக இயங்கி வந்தமையாலும், தமிழறிஞர் சிலர் தமிழ் மொழியையும் வடமொழியையும் தொன்று தொட்டு நன்கு கற்று வந்தார்கள். ஒரு சிலர் வடமொழியை மிகுதியாகக் கற்றுத் தமிழ்மொழியைக் குறைவாகக் கற்று வடமொழியைப் பெருமையாகக் கருதி வந்தார்கள். அவர்கள் தமிழ் மொழியை இழிவாகவும் எண்ணலானார்கள்.

இத்தவறான எண்ணத்தை நன்கறிந்த காரணத்தால், வடமொழி தென்மொழி ஆகிய இருமொழிக்கடலையும் நிலைகண்டுணர்ந்த மாதவச் செல்வரும், 'வடமொழி உணர்ந்தார்க்கு அன்றித் தமிழியல்பு விளங்காது என்று கூறியவரும், இலக்கண இலக்கியம் தத்துவம் கவிதை ஆகிய எத்துறைச் செலினும் அத்துறையெல்லாம் சிறந்து விளங்கிய மேதையுமாகிய சிவஞானசுவாமிகள் வடமொழிவாணர் சிலரது அறியாமையைப் போக்கும் முறையில் அக்காலக் கருத்துக்கு ஏற்றவாறு,

1 வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, அதற்கு இணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெல்லாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர் எனில்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்து அறிவார்!

2 இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர், இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர், இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினார் என்றால் இவ்
விருமொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயம் உளதேயோ?

என்று காஞ்சிப்புராணத்தில் பாடியருளினார். இப்பாடல்களில் சிவஞான சுவாமிகள் வடமொழியும் தென்மொழியும் ஆகிய இரண்டுமே தெய்வமொழிகள் என்றும், இருமொழியும் ஒன்றுக்கு ஒன்று தாழாமல் நிகரான நிலையில் இருப்பன என்றும் கருத்தை உறுதியாக வெளியிட்டார்.

பேரறிஞரான C. R. ரெட்டி அவர்கள் 'திராவிட இந்தியா' என்ற நூலுக்கு அளித்த முன்னுரையில், "திராவிடர்களின் மொழியாகிய தெய்வத்தமிழ்" என்று குறிப்பிட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது

ஒரு சிலர், வடசொற்கள் தமிழ் மொழியில் அளவுக்குமேல் இருப்பதைக்கண்டும் வடமொழிச் செல்வாக்கு இடம் பெற்றிருப்பது பார்த்தும் தமிழ் மொழியானது வடமொழியினின்றே பிறந்தது என்று பிறழவுணர்ந்து கூறலாயினர். இவர்கள் மொழி நூற் பயிற்சியற்ற தன்மையால் அறியாது தவறாகக் கூறினார்கள். இத் தகைய தவறு செய்தவர்களுள் ஒருவர் இலக்கணக் கொத்துரை செய்த ஈசான தேசிகர் ஆவார். அவர்,

அன்றியும், தமிழ்நூற்கு அளவிலை, அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்து எழுத்தால் ஒருபாடை என்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே.
ஆகையால் யானும் அதுவே அறிக;
வடமொழி தமிழ்மொழி எனும்இரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக"

என்று கூறினார். அவர், தமிழ் எழுத்துக்களையும் வடமொழி எழுத்துக்களையும் ஒப்பு நோக்கிப்பார்த்து எ, ஒ, ற, ன, ழ, என்னும் ஐந்து எழுத்துக்களே வடமொழியில் இல்லாமல் தமிழ் மொழியில் இருக்கின்றன என்றும், இச்சிறப்பெழுத்துக்களைக்

கொண்டு தமிழ்மொழியானது வடமொழியினின்றும் வேறானதாகக் கருதக்கூடாது என்றும், மேலும் வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள இலக்கணம் ஒன்றேயாகும் என்றும் மேற் குறித்த நூற்பாவில் துணிந்து கூறினார். அவர் கூறியது முற்றும் தவறானது.

முதலாவது, வடமொழி யெழுத்துத் தமிழ் நெடுங்கணக்கினின்றும் வேறானது. இரண்டாவது, தனி நிலைமொழி உட்பிணைப்பு நிலைமொழி, ஒட்டுச்சொல் நிலைமொழி என்று மொழி நூலறிஞர்கள் கூறும் மொழி வகைகளுள் வடமொழி உட்பிணைப்பு மொழி வகையைச் சேர்ந்தது என்றறிக. சொற்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனியே நின்று வாக்கியமாக அமைந்து பொருள் உணர்த்தும் நிலையுடைய மொழியைத் தனிநிலைமொழி என்பர். இந்நிலையில் உள்ள மொழியில் பெயர் வினைகளாகிய சொற்கள் பெரும்பாலும் ஓர் அசைச் சொற்களாகவே இருத்தல் இயல்பு. இம்மொழியில் விகுதி, இடைநிலை முதலியன இல்லை. சீன மொழி, சயாம் மொழி பர்மிய மொழி, திபத் மொழி ஆகியவை தனிநிலைமொழி வகையைச் சார்ந்தவை. 'கையால் எடு' என்னும் வாக்கியத்தில் கை என்பது ஒரு தனிச்சொல்; எடு என்பது ஒரு தனிச்சொல்; ஆல் என்பது வீணான சொல். இத்தகைய முறையில் அமைந்தது தனி நிலைமொழி (Isolation language) வகை. ஓரசைச் சொற்களாலானது தனிநிலைமொழி ஒட்டு நிலைமொழி (Agglunative language) என்பது. முதனிலை, கடைநிலை, இடைநிலை சாரியை, சந்தி சேர்ந்து ஒட்டிவரும் மொழியாகும். பார்+த்+த்+அன்+அன் என்பவை பார்த்தனன் என ஒட்டி வருதல் காண்க. ஆதலால் தமிழ் ஒட்டு நிலைமொழி வகையைச் சார்ந்தது. அடிச்சொல் இரண்டும் சேருங்காலத்தில் இரண்டும் சிதைந்து ஒன்றுபட்டு நிற்கும் நிலையையுடைய மொழியை யுடைய மொழியை உட்பிணைப்பு நிலைமொழி (Inflectional language) என்பர். So-like என்னும் இரண்டு ஆங்கிலச் சொற்கள் Such என்றும், Who-like என்னும் ஆங்கிலச் சொற்கள் Which என்றும் உட்பிணைப்பாய் மாறினவை,

இத்தன்மையுடையது உட்பிணைப்பு நிலைமொழி. என் + தந்தை என்பவை எந்தை என்றுவது உட்பிணைப்பு நிலை. உட்பிணைப்பு நிலைமொழியில் பகுதி விகுதி முதலியவற்றை எளிதில் பிரித்தறிய முடியாது. இத்தகைய உட்பிணைப்பு நிலையைச் சேர்ந்தது வடமொழி. தமிழில் உட்பிணைப்புச் சொறகள் ஒரு சிலவேயாகும். இப்படியிருக்க எப்படித் தமிழ் வடமொழியைச் சார்ந்தது என்று கூறமுடியும்? முடியாது. மொழி வகையை நோக்கினுலும் தமிழினின்று வேறுபட்டது வடமொழி என்றறிக. மூன்றுவது இலக்கண முறையிலும் தமிழிலக்கணமானது வடமொழி யிலக்கணத்தினின்று மிகவும் மாறுபட்டது. தமிழில் ஆணை ஆண்பால் என்றும், பெண்ணைப் பெண்பால் என்றும் பொருள் கருதிப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. வடமொழியில் சொல்லைக் கொண்டு புல்லிங்கம் (ஆண்பால்), ஸ்ரீலிங்கம் (பெண்பால்) நபுஞ்சக லிங்கம் (அலிப்பால்) எனப் பிரிவுகள் உண்டு. தமிழில் கை என்பது ஒன்றன்பால். வடமொழியில் கரம் என்பது ஆண்பால். பாரியை (மனைவி) என்பது வடமொழியில் பெண்பால். தாரம் (மனைவி) என்பது ஆண்பால். களத்திரம் (மனைவி) என்பது அலிப்பால். இத்தகைய விந்தையான பால்பாகுடையது வடமொழி இலக்கணம். தமிழிலிருக்கும் திணை பால் பாகுபாடு மிகச் சிறந்தது வடமொழியில் ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு உருபுகள் சேர்க்கப்படல்வேண்டும். தமிழில் ஆரும் வேற்றுமைக்குத் தவிர மற்ற வேற்றுமைகளுக்கு அப்படியில்லை. தமிழில் நல்ல பையன், நல்ல மனைவி, நல்ல மக்கள், நல்ல வீடு, நல்ல மாடுகள் என்று பெயரடைகளை வேறுபாடு இல்லாமல் சொல்லலாம். வடமொழியில் அப்படிச் சொல்வது முடியாது. தமிழில் நாம் வந்தோம் என்றுல் நாம் என்னும் சொல் முன்னிலை யாரையும் சேர்த்துக் குறிப்பிடும். நாங்கள் வந்தோம் என்றுல் நாங்கள் என்னும் சொல் முன்னிலையாரைச் சேர்த்துக் கூறுது. இத்தகைய இலக்கணமுறை வடமொழியில் இல்லை.

(தொடரும்)

உலகச் சமயங்கள்

கி. பழநியப்பன்.

3. ஈரானியர் சமயம்:

இந்தியாவிற்கு வடமேற்கில் ஈரான் என ஒரு நாடு இருக்கின்றது. அந்நாட்டு மக்கள் ஆரிய மக்கள் இனத்தைச் சார்ந்தவர்கள். 3000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் குடியேறிய ஆரியர்களைச் சார்ந்தவர்களே யவர்களும். ஆகவே அவர்களுடைய பழக்க வழக்கங்களும் இந்திய ஆரியருடைய பழக்கவழக்கங்களைப் போன்றே இருந்தன. அவர்களும் இவர்களைப் போன்றே பசுவை தெய்வமாகக் கருதினர்; ஆடு மாடுகளை மேய்ப்பதே அவர்களின் முக்கிய தொழிலாக இருந்தது. இந்தியாவில் குடியேறிய ஆரியர்களை இந்துக்கள் என்று அழைப்பது போல ஈரானில் குடியேறிய ஆரியர்கள் ஈரானியர் என அழைக்கப்பட்டனர்.

அக்காலத்தில் ஈரானியர் வாழ்க்கை மிகவும் துன்பம்நிறைந்தவையாக இருந்தன. அடிக்கடி அண்டை நாடுகளிலுள்ள அராபியர்கள், காக்காசியர்கள் முதலியோர் ஈரான் நாட்டில் நுழைந்து மக்களுடைய ஆடு மாடுகளையும் உணவுப் பொருட்களையும் கொள்ளையிட்டுச் செல்வர். கொள்ளையடிப்பதையே அவர்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஈரான் குளிர் மிகுந்த நாடாகையால் அங்குள்ள மக்களுக்கு உணவும், உடையும் அதிகமாகத் தேவைப்பட்டன. குளிர் மிகுந்த நாடுகளில் பயிர்தொழில் செய்வதற்குத் தக்க நிலை ஒரு சில நாட்களுக்குத் தான் இருக்கும். அக்காலங்களில் பயிர்செய்யும் பொருளைத்தான் ஆண்டு முழுவதற்கும் அவர்கள் வைத்துக் கொள்ள வேண்டும். ஆடுகளைப் பாதுகாப்புடன் மேய்த்து அதன் உரோமங்களை எடுத்து உடைகள் தயாரித்துக்கொள்ள வேண்டும். இவைகளில் ஒருபகுதியைக் கொள்ளைக்காரர்கள் கொள்ளையிட்டுச் சென்று விடுவர். ஆகவே ஈரானியர் ஒவ்வொருவரும் தான் வாழவேண்டுமென்றுல் தனக்கு வேண்டிய உணவிற்கும் உடைக்கும் அவனவன் அன்றுடம்

பாடுபட வேண்டியிருந்தது. ஒருவர் உழைப்பினால் பெற்ற பொருள் ஒருவருக்கே போதுமான அளவு இருந்தபடியால் ஒவ்வொருவரும் அவரவர்களைக் காப்பாற்றிக் கொள்ளவே உழைத்தனர். சோம்பித்திரியும் மக்கள் ஈரானில் காண்பது அரிது. வேலை செய்யாது பிறர் உழைப்பில் வாழ்பவர்கள் இழிவாகக் கருதப்பட்டனர். இதற்குக் காரணம் அந்நாட்டின் வெப்ப தட்ப நிலையேயாகும். ஆனால் இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள் நிலை இதற்கு நேர்மாறாக இருந்தது. இங்குள்ள நீர்வளமும் வெப்ப தட்பநிலையும், ஆடுமாடுகள் மேய்ப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் மிகவும் ஏற்றதாக இருந்தன, அதன் பயனாக சோம்பேறிகள் அதிகமாயினர் பிறர் உழைப்பில் வாழ்பவர்களைத் தெய்வப் பிறவி என்று எண்ணும் அளவிற்குச் சூழ்நிலை அமைந்து விட்டது.

பண்டைய மக்கள் அனைவரையும் போல் ஈரானியர்களும் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டு வந்தனர். பயிற்தொழிலுக்கு இன்றியமையாத கதிரவன், மழை, காற்று, மேகம், முதலியவைகளைத் தெய்வமாக வணங்கினர். ஆண்டுதோறும் மலை உச்சிகளுக்குச் சென்று இத்தெய்வங்களை வணங்கியபின்பே பயிர் தொழிலைத் தொடங்குவர் அதுபோல அறுவடையான பின்பும் அறுவடைப் பொருட்களை சமைத்துப் படைத்து இத்தெய்வங்களை வணங்கி நன்றி செலுத்துவர். இவ்வாறு மலையுச்சிகளுக்குச் சென்று தெய்வ வழிபாடு நடத்திய மக்கள் பின்பு அவரவர்கள் வீட்டிலேயே வழிபடத்தொடங்கினர். அதன் பொருட்டு ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு உருவத்தை அமைத்தனர். இவ்வாறு வீடுதோறும் தெய்வ உருவங்களும் வழிபாட்டு முறைகளும் வேறுபட்டன. வீட்டுத் தெய்வங்களிலிருந்து. குடும்பத் தெய்வமும் கிராமத் தெய்வங்களும் தோன்றின. இவ்வாறு பல தெய்வங்கள் தோன்றி வழிபாட்டுச் சடங்குகள் மிகுதியாக்கி விட்டன. நாளடைவில் இத்தனித்தனி வழிபாடுகளினால் மற்ற வேலைகள் இடர் ஏற்பட்டது. கூடி ஆராய்ந்து ஒரு நல்ல முடிவைக் கண்டனர். ஊரிலுள்ள எல்லோருடைய தெய்வங்களையும் ஒன்றுசேர்த்து ஒரு பொது இடத்தில் அமைத்து வழிபடுவது

என்று முடிவு செய்தனர். அப்பொது இடங்களே பின்பு கோயில்களாக விளங்கின. அக்கோயில்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் சென்று தனித்தனியாக வழிபட்டு வந்தனர். இம்முறையிலும் பல இடர்கள் இருப்பதையுணர்ந்து எல்லோருடைய சார்பிலும் வழிபாடு நடத்துவதற்கு என்று ஒரு சிலரை ஏற்பாடு செய்தனர். அவர்களே பூசாரிகளின் பரம்பரையாவர். ஆண்டவனிடம் மற்றவர்களின் விருப்பத்தைச் சொல்லி அவர்களுக்காக வழிபடுவதும் ஆண்டவன் சார்பில் அவர்களை வாழ்த்துவதும் அவர்கள் வேலையாக இருந்தன. அதன் பயனாக மக்கள் தங்கள் குறைகளைத் தெய்வத்திடம் முறையிடுவதற்குப் பூசாரிகள் இன்றியமையாதவர்கள் என்று கருதும் நிலை ஏற்பட்டது. இதை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு மந்திர தந்திரங்களையும் கையாண்டு பூசாரிகள் தங்கள் செல்வாக்கை உயர்த்திக் கொண்டனர். பூசாரிகளின் உதவியில்லாமல் மக்கள் இவ்வுலகில் வாழ முடியாது என்று நம்பினர். பூசாரிகள் சர்வாதிகாரிகளாக விளங்கினர். தங்கள் மனம் போல எதையும் செய்து வந்தனர். ஏன் என்று கேட்பதற்கு ஆள் இல்லை. மக்கள் அவர்களுக்கு அஞ்சி வாழ்ந்து வந்தனர்.

சற்றேறக் குறைய 2600 ஆண்டுகளுக்கு முன் ஈரானிலிருந்த இந்நிலைமை மாற்றி அதற்கு ஓர் முடிவுகாண ஒரு பெரியார் தோன்றினார். காசுப்பியன் கடற்கரையிலுள்ள அசர்பீசான் என்னும் நகரில் பொருசாப்பிட்டமா என்று ஒருவர் வாழ்ந்தார். அவருடைய மனைவி துக்தோவா கி. மு. 660-ஆம் ஆண்டு ஒரு ஆண் மகவை ஈன்றாள். சோராத்சுட்ரா எனும் அக்குழந்தையே பிற்காலத்தில் சோராத்சர் என விளங்கியவர். அக்குழந்தையின் பிறப்பு வளர்ப்பைப் பற்றி அந்நாட்டிலே பல கதைகள் இன்றும் சொல்லப்பட்டு வருகின்றது,

சோராத்சர் பிறந்தவுடன் அந்நாட்டுத் தலைமைப் பூசாரியின் உடல் நடுங்கிற்றாம். தன் இனத்திற்கும் தான் வழிபடும் தெய்வங்களுக்கும் முடிவுகாலம் வந்து விட்டது அவைகளை

அழிப்பதற்காகவே அக்குழந்தை பிறந்துள்ளது என்பதை அத்தலைமைப் பூசாரி தெரிந்து கொண்டார். தன் இனம் வாழ்வதற்கு இக்குழந்தையைக் கொல்வதே வழி என்ற முடிவிற்கு வந்தார். ஏவளாட்களை அனுப்பி குழந்தையைத் திருடி வரச்செய்தார். கோயிலில் அமைக்கப்பட்டிருந்த தீக்குழியில் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பில் குழந்தையை எறிந்து விட்டுச் சென்றார். பெற்றதாய் குழந்தையைக்காணாது துடிதுடித்து தேடி அலைந்து கோயிலுக்குச் சென்று ஆண்டவனிடம் முறையிடுவோம் என்று கோயிலுக்கு வந்தாள். தீக்குழியின் நடுவில் குளிர்ந்த நீரில் விளையாடுவது போன்று நெருப்புடன் குழந்தை விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட தாய் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

இவ்வாறு அப்பூசாரித் தலைவன் சோராத்சரைக் கொல்வதற்குப் பல சூழ்ச்சிகளைக் கையாண்டான். ஆனால் ஒவ்வொரு முறையும் ஆண்டவன் அருளால் குழந்தை உயிர் தப்பிப்பிழைத்தது. பூசாரியும் தன் முயற்சிகள் பலிக்காது என்பதை உணர்ந்து வாளாயிருந்தான். பெற்றோர்கள் குழந்தையின் தெய்வத் தன்மையை உணர்ந்து அதைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். வயது வந்தவுடன் தக்க ஒரு குருவினிடம் அனுப்பி கல்வி கற்கவும் ஏற்பாடு செய்தனர். அங்கு சமயம், மருத்துவம் பயிர்த்தொழில் முதலிய வற்றில் நல்ல பயிற்சி பெற்றார் சோராத்சர்.

தன்னுடைய படிப்பு முடிந்து சோராத்சர் வீடு திரும்பிய காலத்தில் ஈராணியர்களுக்கும் துராணியர்களுக்கும் போர் நடந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட சோராத்சர் உடனேயே நாட்டிற்குத் தன் கடமையைச் செய்யவேண்டுமென்று போர்க்களத்திற்குச் சென்றார். அங்கு காயமுற்றவர்களுக்கு மருத்துவ உதவி செய்யும் பணியை மேற்கொண்டார். போர் முடிந்தபின் நாட்டில் ஏற்பட்ட வறுமை நிலையினால் ஏழைகளும் நோயாளிகளும் துன்புறுவதைக் கண்டு மனம் தாங்காது அவர்களுக்குத் தொண்டு செய்வதையே தன் கடமையென்று கருதினார். இவ்வாறு ஐந்து ஆண்டுகள் இச்சிறந்த பணியில் இடைவிடாது ஈடுபட்டு வந்தார்.

பெற்றோர்கள் தங்கள் அருமை மகனுக்குத் திருமணம் செய்து வைத்து அவன் இல்லறம் நடத்துவதைப் பார்த்து மகிழ வேண்டுமென்று விரும்பினர். மகனும் அவர்கள் விருப்பத்திற்கு இணங்க அவோவி என்னும் பெண்ணை மணந்துகொண்டான். ஆனால் தன் மனதிற்கு உகந்த தொழிலாகிய ஏழைகளுக்குத் தொண்டு செய்வதை மட்டும் விடவில்லை. தொடர்ந்து அதில் அதிகமாக ஈடுபட்டு வந்தார். இவ்வுலகில் தான் பிறந்தது இப்பணியாற்றுவதற்காகத்தான் என்று சோராத்சர் திடமாக நம்பினார். இவ்வாறு பத்தாண்டுகள் இல்லறத்தில் இருந்துகொண்டு இவ்வாறு மக்களுக்குப் பணியாற்றி வந்தும் அவருக்கு ஏனோ மன அமைதி ஏற்படவில்லை.

'மக்கள் படும் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஓர் எல்லை கிடையாதா? இதற்கு ஓர் முடிவு காணாவிடில் என்ன பயன்?'' என்ற எண்ணம் இடைவிடாது சோராத்சரின் மனதில் தோன்றிக்கொண்டே இருந்தது. இதற்கு ஒரு முடிவுகாண வேண்டுமென்று உறுதிகொண்டார். மனைவியிடம் சென்றார். ''எனக்கு விடைகொடு, நான் காடு சென்று மலைக்குகைகளின் அமைதியிலே தனிமையாக இருந்து சிந்தனைசெய்து உலகிலுள்ள இன்பதுன்பங்களுக்குக் காரணம் யாது என்பதை அறியப்போகின்றேன்'' என்றார். மனைவி கலங்கினாள்.

''இது என்ன! பயனற்ற வேலையில் ஈடுபட விரும்புகின்றீர்கள். ஊரிலுள்ள மற்றவர்களைப்போல் ஆடுமாடுகளை வளர்த்தும், பயிர்த்தொழில் செய்தும் பொருள்ஈட்டி இன்பமாக வாழ்வதை விட்டு இப்படிச் செய்கின்றீர்களே!'' என்று ஏங்கினாள். சோராத்சரின் செவிகளில் அவை ஒன்றும் நுழையவில்லை. வீட்டைவிட்டு வெளியேறினார். சாபலன் எனும் மலையை நாடிச் சென்றார். உண்மையை உணர்ந்த பின்பே ஊர் திரும்புவது என்று உறுதிகொண்டார். பல நாட்கள் ஒரு குகையில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். போர்க்களத்திலும், வறுமையுற்ற மக்களிடத்திலும் தான் பெற்ற அனுபவங்களை எண்ணிப் பார்த்தார். வெகு நாட்கள் வரை தெளிவுபிறக்கவில்லை.

ஒருநாள் மாலைக் கதிரவன் அவர் சிந்தனைக்கு விடை அளித்தான். கதிரவன் வெண்மையான கதிர்களை எங்கும் பரப்பிக்கொண்டிருந்தான். சிறிது சிறிதாக வெண்மை நிறம் குறைந்தது. செம்மை நிறம் வளர்ந்தது. இரு மலைகளுக்கு இடையே செம்மைக் கதிரவனும் மறைந்தான். செம்மை கருமையாகியது. எங்கும் இருள் சூழ்ந்தது. இது நாள்தோறும் நிகழும் காட்சியாக இருந்தாலும் அன்று இதைக்கண்ட சோராத்சருக்கு ஒரு பெரும் உண்மை புலப்பட்டது.

''ஒவ்வொருநாளும் பகல் என்றும் இரவு என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பகல் ஒளியுடையது இரவு இருளுடையது. பகல் என்றும் இரவாகாது. இரவு என்றும் பகலாகாது'' எனும் இயற்கையின் செயலிலிருந்து சோராத்சர் ஓர் உண்மையைத் தெரிந்துகொண்டார். ''பகலும் இரவும்போல் நன்மையும் தீமையும் ஒன்றுடன் ஒன்று சேராது. நன்மையைக் கண்டால் தீமை விலகும், தீமையைக் கண்டால் நன்மை விலகும். நன்மையிலிருந்து எப்பொழுதும் நன்மையே பிறக்கும். தீமையிலிருந்து எப்பொழுதும் தீமையே பிறக்கும். ஆகவே நல்ல குணமுடைய தெய்வங்களை வணங்கி மற்றவர்களுக்குத் தீங்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் அத்தெய்வம் அதை ஏற்றுக்கொள்ளாது. அதுபோல தீமைக் குணங்களுடைய தெய்வங்களை வணங்கி தனக்கு நன்மை செய்ய வேண்டுமென்று வேண்டினால் அவர்கள் நன்மை செய்ய மாட்டார்கள். உலகம் இரண்டு சக்திகளினால் இயங்குகின்றது ஒன்று நன்மை மற்றொன்று தீமை'' இவைகளே சோராத்சர் கண்ட உண்மைகள்.

நன்மை தீமைகள் ஏன் இருக்கவேண்டும். மக்கள் வாழ்க்கையில் அவைகளை எப்படிப் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ வேண்டும்? என்பவைகளைப்பற்றி மேலும் பல நாட்கள் சிந்தனையிலாழ்ந்து தெளிவு கண்டார். முடிவில் தான் கண்ட உண்மைகளை மக்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டுமென்று காட்டைவிட்டு நாட்டிற்குத் திரும்பினார் சோராத்சர்.

அறிக்கை

"செந்தமிழ்"

1. அச்சிடுமிடம்: மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

2. வெளியிடும் காலம்: திங்கள் தோறும்.

3. அச்சிடுபவரின் பெயர்: தமிழவேள், பி. டி. இராசன், B.A. (Oxen)Bar-at-law, M.L.C.
இனம்: இந்து.
முகவரி: மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

4. வெளியிடுபவரின் பெயர்: தமிழவேள் பி. டி. இராசன், B.A.(Oxen) Bar-at-law, M.L.C.
இனம்: இந்து.
முகவரி: மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

5. ஆசிரியரின் பெயர்: தமிழவேள். பி. டி. இராசன், B.A.(Oxen) Bar-at-law, M.L.C.
இனம்: இந்து.
முகவரி: பாளையம் இல்லம், தல்லாகுளம் (அஞ்சல்) மதுரை.

6. இதழின் உரிமையாளர்களின் பெயர்களும், முகவரியும் அல்லது மேற்படி இதழின் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவரின் பெயர்களும், முகவரிகளும். — மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பி. டி. இராசனாகிய நான், என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில், மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்று அறிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
பி. டி. இராசன்,
வெளியிடுபவர்.

மதுரை
14—3—59

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நூல்கள் விற்றுகெப்பம்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

			ரு.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினாவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42.	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
	திருக்குற்றாலமாலை	—	0	2
1.	சிலப்பதி... லையார் சதகம்	—	0	4
46.	...மோதந்தம்	—	0	3
2. 47.	...மொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
52.	கூடற்புராணம்	—	0	10
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
56.	பாப்பாவினம்	—	0	10
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3
59.	கடம்பர் கோயில் உலா	—		6
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—		6
61.	கலைசைக்கோவை	—	0	12
62.	பெருந்தொகை	—	5	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
64.	பிரமலைக்கோவை	—	0	12
65.	மத்யவியாயோகம்	—	0	2
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12
71.	துளைத்தலைவர் மினைமலர்	—	0	10

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50, தனிப்படியின் விலை அணா. இதுவரை 53 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 சிங்கட் பகுதிகள் உள்ளவை பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேல் பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா விதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழ்வேள் பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.